புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வூ ஏப்ரல் மீ 14உ [ந. 244

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

அமெரிக்காவின் ஜனாதிபதியான

பிராங்க்லின் D. ரூஸ்வெல்ட்

1945-ம் வூ ஏப்ரல் மீ 12உ வியாழக்கிழமை

இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

பிரஸங்கம் CCXLIV.

வெகுநாள் எதிர்த்துப்போராடலாமென்ற நாஸிகளின் நம்பிக்கை.

தென்கிழக்கு ஜெர்மனியில் கொத்தளங்களின் அமைப்பு.

ட்ரூ மிடில்டன்.

(ஈவ்னிங் ஸ்டாண்டர்டின் "பாரிஸ் நிருபர்)."

தென்கிழக்கு ஜெர்மனியில் ஜெர்மானியர்கள் மகத்தான தற்காப்புக் கொத்தளங்களைத் துரிதமாக அமைத்து வருகிறார்கள். S. S. படைகளும், சில சேனைகளும் நாஸிக்கக்ஷியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் போர்முனைகளிலுள்ள ஜெர்மன் படைகள் அழிந்தபின் அந்தக் கொத்தளங்களிலிருந்துகொண்டு போரை நடத்துவதாக நம்பியிருக்கின்றன.

ருஷ்யரின் கடைசியான தாக்குதலுக்குப் பின்னும் ரைன் நதியில் பிரிடிஷ், அமெரிக்க வெற்றிகளுக்குப் பின்னும், இந்த வேலைகள் துரிதப்படுத்தப்படுகின்றனவென்றும் அதே மாதிரி கீல் கால்வாயிலும் ஜெர்மானியர்கள் கொத்தளங்களை அமைத்து வருகிறார்களென்றும், நம்பத்தக்க ஆதாரங்களிலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இதைக்கண்டு ஸ்விட்ஸர்லாந்து ஜனங்கள் கவலைப்படுகிறார்களாம். ஏனென்றால் கொத்தளங்களை அமைத்ததி லிருந்து ஸ்விட்ஸர்லாந்தின் எல்லைச் சரகத்துக்கருகில் பிரிடிஷ் அமெரிக்கப்படைகளும், ருஷ்யர்களும் கடுமையான போரை நடத்தக்கூடும்.

பேர் சொல்லக்கூடாத ஒரு கனவான் சமீபகாலத்தில் வியன்னாவுக்குச்சென்று திரும்பி வந்தார். இரண்டு பயணங்களும் மிகவும் கஷ்டமாக இருந்தன. ஏனென்றால் கொத்தளத் திற்குள் செல்லும் அநேக ரஸ்தாக்களை ஜெர்மானியர்கள் மூடிவிட்ட படியால் அவர் சுற்றிச் செல்லவேண்டியிருந்தது. எதிரி அந்தப் பிராந்தியத்திற்குள் சகலவிதமான சர்ப்பராக்களை யும் குவித்து வருகிறான் என்று அவன் சொன்னான்.

உலகத்தை எதிர்த்துப் போராட நாஸிகள் எந்தப் பிராந்தியத்திற்குள் பின்வாங்கப் போகிறார்களென்பது இன்னும் தெளிவுபடவில்லை. ஆகிலும் அதன் மத்ய பிரதேசம் ஸால்ஸட்பர்க்கிலிருந்து கார்னிக் ஆல்ப்ஸ் வரையிலுள்ள ஒரு கோட்டிற்குத் தெற்கிலுள்ளது. அதன் இடது பார்ச்வம் இன்நதியின் நுனிபாகத்திலுள்ளது. இதற்குள் பெர்கன்ஸ்காடனும் சேர்ந்துவிடும். ஹிட்லரின் தலைமை காரியாலயம் ஏற்கனவே பலமாக தற்காப்பு செய்யப் பட்டிருக்கிறது. நேசதேசத்தார்களின் படைகளின் பரிமாணம், முஸ்தீப்புகளுக்கும் தற்காப்புச் செய்கிறவர்களின் முஸ்தீப்புகளுக்குமுள்ள வித்தியாசத்தை மலைகளும், ரஸ்தாக் களும் பாலங்களும் இல்லாததைக்கொண்டு சரிப்படுத்தி விடுவதாக எதிரி உத்தேசித் திருக்கிறான்.

தற்காப்புப் படைகளின் சங்கியை பலவாராக இருக்கிறது. சிலர் அது 2,00,000 இருக்குமென்று நினைக்கிறார்கள். ஆகிலும் ஜெர்மன் சேனை இப்பொழுது அசைவற்றிருக் கும் நிலைமையில் 10,00,00-க்கு மேல் இருக்காது என்று தோன்றுகிறது. போர்முனைகளி லிருந்து ஒளிகளுக்கு தப்பி ஓடும் ஆயிரக்கணக்கானவர்களை நேசதேச டாங்கிகளும் பீரங்கி களும் ரஸ்தாக்களில் அழித்துவிடும்.

இந்தக் கொத்தளங்களை ஜெர்மனி அமைத்து வருவதின் எண்ணம் நன்றாய் புலப்படு கிறது. பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா ஆகிய மூன்று நாடுகளுக்குள் மனஸ்தாபங்கள் ஏற்பட்டால்தான் ஜெர்மனி தப்பிப்பிழைக்கலாம் என்ற நம்பிக்கை நாஸிகளுக்கு இருந்து வருகிறது. யால்டா மகாநாட்டிற்குப்பின், தோல்வி என்றால் மரணமும் அல்லது காவல் கூடமும்தான் நிச்சயம் என்றிருந்த நாஸிகளும் S. S. படைத்தலைவர்களும் கொத்தளங்களுக் குள்ளிருந்து நீண்டகாலம் எதிர்த்து வந்தால் காலஹரணம் ஏற்படுமென்றும் அதற்குள் நேசதேசங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்படுமென்றும் அதன்பின் ஏதாவது யுக்திசெய்து தண்டனைக்குட்படாமல் தப்பித்துக்கொள்ளலாமென்றும் அவர்கள் எண்ணம் கொண்டி ருக்கிறார்கள்.

இந்தக் கொத்தளங்களை அமைப்பதில் எதிரி ஆயிரக் கணக்கான நேசதேச யுத்தக் கைதிகளை அந்த பிராந்தியத்துக்குக் கொண்டுபோகிறான் என்பதுதான் கெடுதலான விஷயம். அவர்கள் பிரிடிஷ், ருஷ்ய, அமெரிக்க சேனைகள் ஆக்கிரமிக்கக்கூடிய இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். அந்தக் கைதிகளை எதிரி பிணையாட்களாக வைத்திருப்பான். அந்த காலத்திற்குள் நேசதேசத்தார்கள் ஏராளமான ஜெர்மானியர்களைக் கைது செய்து விடுவார்கள் என்பது நாஸிகளின் நடத்தையைக் கொஞ்சம்கூட தடைசெய்யாது. நேச தேசத்தார்களிடமிருந்து சலுகைகளைப்பெற நாஸிகள் கைதிகளின் உயிருக்கு ஆபத்து உண்டு பண்ணுவோமென்றுகூட பயமுறுத்தத் துணிந்து விடுவார்களென்றும் நேசதேச அதிகாரி கள் நம்புகிறார்கள். கொத்தளங்கள் அமைக்கப்பட்டிருக்கும் பிரதேசத்தின் சிரமங்கள் மிகுதியானவை. மலைகளிலுள்ள குறுகலான வளைந்து செல்லும் ரஸ்தாக்களையும் பாலங் களையும் எதிரி சுலபமாக உடைத்து விடக்கூடும். நேசதேசத்தார்கள் ஏராளமான துருப்பு களையும் டாங்கிகளையும், பீரங்கிகளையும் உபயோகிக்க முடியாமல் மலைகள் செய்துவிடும். ஒரு கம்பெனியிலுள்ள படைகள் ஒரு டிவிஷன் படைகளை அநேக நாட்கள் வரையில் சமா ளித்து நிற்கும். விமானப்படை உபயோகமும் குறைந்துவிடும். ஜெர்மானியர்கள் மலைச் சரிவுகளில் பெரிய குகைகளை அமைத்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் உணவுப்பொருள்களை யும் வெடிமருந்துகளையும் ஒளித்து வைத்திருக்கிறார்கள். சிறிய குகைகளில் விமானத்தாக்கு தலின் பொழுது படைகள் பதுங்கியிருக்கும்.

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

3—4—45 (செவ்வாய்க்கிழமை).	அமெரிக்கப்படைகள் ஒகினுவாவை இரண்டாகத் துண்டித்தன. அமெரிக்கப்படைகள் சூலுத்தீவுக்கூட்டத்தில் டாவியில் இறங்கின. அமெரிக்கர்கள் காஸலைப்பிடித்தார்கள். ஒஸ்னுபிரக்கை அடைந்தார்கள். பிரிடிஷ் படைகள் V ஆயுதங்கள் புறப்படும் நிலயங்களுக்குப் போகும் மார்க்கங்களைத் துண்டித்துவிட்டன.
4—4—45 (புதன்கிழமை).	ருஷ்யர்கள் வினர்நியூஸ்டாட்டை பூராவும் ஆக்கிரமித்தார்கள். பிரெஞ்சுப்படைகள் கார்ல்ரூகிக்குள் நுழைந்தன. பிரிடிஷ் படைகள் டாங்குப்புக்குள் சென்றன.
5—4—45 (வியாழக்கிழமை).	ருஷ்யா ஜப்பானுடன் செய்து கொண்டிருந்த நடுநிலமை உடன்படிக்கையை ரத்து செய்து விட்டது. நேசதேசத்தார்கள் பஸிபிக் கமாண்டை ஒன்றுபடுத்தி விட்டார்கள்.
6—4—45 (வெள்ளிக்கிழமை).	காயிஸோவின் மந்திரி சபை ராஜினமாச் செய்தது. அமெரிக்கர்கள் ஹாமை சுத்தி செய்தார்கள்.
7—4—45 (சனிக்கிழமை).	அமெரிக்கர்கள் ஜாப் கடற்படையை முடமாக்கிவிட்டார்கள்—6 யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. கடற் தளபதி சூசுகி ஜப்பானில் புதிய மந்திரி சபையை அமைத்து விட்டார். ருஷ்யர்கள் வியன்னுவுக்குள் நுழைந்தார்கள்.
8—4—45 (ஞாயிற்றுக்கிழமை).	ருஷ்யர்கள் கிழக்கு பிரஷ்யாவில் கோனிக்ஸ்பர்க் துறைமுகத்தை ஆக்கிரமித்துவிட்டார்கள்.
9—4—45 (திங்கட்கிழமை).	பிரிடிஷ் படைகள் பர்மாவில் தாழியைப்பிடித்தன. அமெரிக்கர்கள் ஹனேவரின் சுற்றுப்புறத்தை அடைந்தார்கள். கோனிக்ஸ்பர்க்குக்கான போர் முடிந்தது.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை.—

(1) பிரிடிஷ் துருப்புகள் ஹாலந்திலுள்ள ஆர்ன்ஹெமுக்குள் புகுந்து விட்டன.

(2) ஹாலந்து வழியாக ஜெர்மனிக்குள் நுழைந்த கனடியத் துருப்புகள் சூடர் கடல் ஓரமாக, ஜெர்மனியின் வடக்குக் கடல் துறைமுகமான எம்டனை நோக்கி முன்னேறி வருகிருர்கள். ஸட்பன், மெப்பம், டெக்ஹுஸன் முதலியவற்றை அவர்கள் பிடித்தார்கள்.

(3) ஒஸ்னுபிரக்குக்குக் கிழக்கில் முன்னேறிய பிரிடிஷ் இரண்டாவது சேனை பிரெமனை அடைந்தபின் ஹாம்பர்க்கை நோக்கி முன்னேறி வருகிறது.

(4) அமெரிக்க 9-வது சேனை ஹனேவரைப் பிடித்துவிட்டு, கிரப்ஸ் ஆயுத உற்பத்தி சாலையுள்ள எஸ்ஸனுக்குள் புகுந்துவிட்டது.

(5) பாடர்பார்னுக்குக் கிழக்கில் முன்னேறிய அமெரிக்க 1-வது சேனை பெர்லினிலிருந்து 115 மைல்களுக்கும் லிப்ஸிக்கிலிருந்து 40 மைல்களுக்குள்ளும் வந்துவிட்டது.

(6) கொதாவிலிருந்து அமெரிக்க 3-வது சேனை மூல்ஹாஸனுக்குள் நுழைந்துவிட்டது. பெர்லினிலிருந்து 150 மைல்களிலுள்ள எர்பர்ட்டைச் சுற்றி வளைத்துக்கொண்டது. செகோஸ்லாவேக்கியா எல்லையிலிருந்து 50 மைல்களிலும் ருஷ்யப்படைகளிலிருந்து 170 மைல்கள் தாண்டியும் அது இருக்கிறது.

(7) அமெரிக்க 7-வது சேனை நீயூரம்பர்க்குக்கு 40 மைல்களுக்குள் வந்துவிட்டது.

(8) பிரென்சு 1-வது சேனை கார்ல்ஸ்ருஹிக்குள் நுழைந்துவிட்டது.

கிழக்குப்போர் முனை.—

(1) வடக்கில் கிழக்கு பிரஷ்யாவின் தலைநகரமான கொனிக்ஸ்பர்க் விழுந்துவிட்டது.

(2) மத்தியில் பிரெஸ்லாவுக்கான போர் துவக்கமாகிவிட்டது.

(3) தெற்கில் ஹங்கேரி பூராவும் எதிரிகளில்லாமல் சுத்தி செய்யப்பட்டுவிட்டது. ஆஸ்திரியாவுக்குப்போகும் வாசற்படி போன்ற பிராடிஸ்லாவா சமீப காலத்தில் வீழ்ச்சி பெறும்.

(4) 5-வது யூக்ரேனிய சேனை மத்திய கார்பேதியன் மலைகளிலுள்ள ருசாம்பாரோக் கைப்பிடித்துவிட்டன.

இதாலி.—மூன்று மாத ஓய்வுக்குப்பின் 8-வது சேனை போ நதிப் பள்ளத்தாக்கில் தாக்குதலைத் துவக்கிவிட்டது. பூசிக்னனோ, லூகொ, கொடிக்னொலா பிடிபட்டன. 5-வது சேனை, ஸ்பீஸியாத் துறைமுகத்தை நோக்கி முன்னேறும்பொழுது மாஸ்ஸாவைப்பிடித்தது.

யூகோஸ்லாவியா.—மார்ஷல் டிட்டோ காஸ்பிக்கையும் சாராஜிவொவையும் விடுவித்தன

பஸிபிக்.—

ஓகினவா.—அமெரிக்கர்கள் வடக்கு ஓகினவாவிலுள்ள பொடொபூ தீபகற்பத்தை ஆக்கிரமித்துவிட்டார்கள். தீவின் தெற்குப்பகுதியில் பலமான போர் நடைபெறுகிறது. பிரிடிஷ் கடற்படை ரையூகியூஸ் தீவுக்கூட்டத்தில் தெற்குக் கோடியுள்ள சாகாஷிமா, ரெட்டோத்தீவுகளைத் தாக்கிவருகிறது.

ஓகினவாவுக்கு அருகில் அமெரிக்க, பிரிடிஷ் கடற்படைக்கும் ஜப்பானியக்கடற் படைக்கும் நடைபெற்ற போரில் ஜப்பான்—யாமாடொ என்ற சூபர்டிரெட்னாட் கப்பலையும், 2 சஞ்சாரிகளையும், 3 நாசகாரிகளையும் இழந்தது. அமெரிக்காவுக்கு 3 நாசகாரிகள் நாசம். சூகாடாத்தீவில் படைகள் இறங்கிவிட்டன. சூகன் தீவு ஆக்கிரமிக்கப்பட்டது. ஓகினவாவின் கிழக்குக்கரையிலிருந்து அவைகள் 7, 10 மைல்கள் தூரத்திலிருக்கின்றன.

2. பிலிப்பைன்ஸ்.—தெற்கு மிண்டானேவின் விடுதலை அநேகமாகப் பூர்த்தியாகி விட்டது. மத்திய பிலிப்பைன்ஸிலுள்ள மாஸ்பாடித்தீவில் படைகள் இறங்கிவிட்டன.

3. சூலுத்தீவுக்கூட்டம்.—பிலிப்பைன்ஸுக்கும் போர்னியோவுக்கும் மத்தியிலுள்ள சூலுத்தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த சாகா, சாங்கா, பாங்கோத்தீவுகளில் படைகள் இறங்கி விட்டன.

சைனா.—சீனப்படைகள் ஹாங்கோவிலிருந்து வடக்கில் 140 மைல்களிலுள்ள செங்கி யாங்கைப்பிடித்தன.

பர்மா.—(1) 14-வது சேனைப்படைகள் மாண்டலேக்குத் தெற்கிலும் மெய்க்டிலாவுக்கு கிழக்கிலுமுள்ள தாழி இருப்புப்பாதை ஜங்கிஷனைப்பிடித்தது. ஷான் நாடுகளுக்குச் செல்லும் முக்கியமான ரஸ்தாவிலுள்ள ஹாலென்கெட்டை வளைத்து வருகிறார்கள்.

(2) அரக்கானிலுள்ள டாங்கூப் விழுந்துவிட்டது.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

1—4—45 (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தானங்கள், ராணுவ இலக்குகள்.—ரூர் (Ruhr), மேற்கு அரங்கத்தில் போரிடும் பிரதேசங்களுக்குக் கிழக்கு.

பாலங்கள், ரயில்வே இலக்குகள்.—வட இதாலி (Northern Italy), ஆஸ்திரியா (Austria).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—ஓகினவா (Okinawa).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

2—4—45. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ராணுவ இலக்குகள்—*மேற்கு ஜெர்மனி* (Western Germany).

போக்குவரத்துகள்.—*வட இதாலி* (N. Italy).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—ஜெர்மன் கப்பற் கூட்டம்—*காட்டிகாட்* (Kattegat).

இலக்குகள்.—*பெர்லின்* (Berlin), *மாக்டிபர்க்* (Magdeburg).

ஆறு வியாபாரக் கப்பல்கள்.—*ஜாண்ட்ஜ் பிஜார்ட்* (Sandgfjord).

தூரக்கிழக்கு (Far East).

ரயில்வே இலக்குகள்.—*ஸியாமிலுள்ள காயெங்கோல்* (Kaaengkhol).

பர்மா (Burma).

பாலங்கள்.—*பர்மா* (Burma), *ஸியாம்* (Siam) *ரயில்வே.*

3—4—45. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ஜெர்மன் ராணுவங்கள், துருப்பு முகாம்கள்—*நார்டாஸன்* (Nordhausen).

இலக்குகள்—*கீல்* (Kiel).

ரயில்வே பாலம்—*டான்னக்ஸ்டீன்* (Tannachstein).

தளவாட துவியல்கள், வாயு உற்பத்தி நிலயங்கள்—*போ சமவெளி* (Po Valley).

பெரும் ரஸ்தாக்கள் ரயில் லயன்கள்—*யூகோஸ்லாவியா* (Yugoslavia).

இரவு.—பேர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

பாலங்கள்.—*லெட்பாடன்* (Letpadan), *தான்ஸூ* (Thonze).

இரண்டு பாலங்கள்.—*பர்மா* (Burma), *ஸியாம்* (Siam) *ரயில்வே.*

ரஸ்தா பாலம்.—*தாய்க்கி* (Taikkyi).

துருப்பு பிரதேசங்கள், இதர இலக்குகள் *மெய்க்டிலா* (Meiktila), *தாஸி* (Thazi).

நகர பரிபாலனகட்டடங்கள்—*புரோம்* (Prome).

துருப்பு நிலயங்கள்—*டாங்குப்* (Taungup) *பிரதேசம்.*

4—4—45. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—இலக்குகள்—*கீல்* (Kiel) *ஹாம்பர்க்* (Hamburg).

விமான நிலயங்கள்.—*வடமேற்கு ஜெர்மனி* (N. W. Germany).

போக்குவரத்துகள்.—*வட இதாலி* (N. Italy), *ஆஸ்திரியா* (Austria).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—தொடர்ச்சியான எண்ணெய்க்கிணறுகள், எண்ணெய் சுத்தம் செய்யுமிடங்கள்.—*ரூர்* (Ruhr).

தூரக்கிழக்கு (Far East).

முக்கியமான ரயில்வே பாலம்.—*ஸமாங்* (Samong) *நதி, பாங்க்காக்* (Bangkok).

இலக்குகள்—*ஓகினுவா* (Okinawa), *ஷிஷூவோகா* (Shizuoka), *டாக்காவா* (Tachkawa), *கொய்ஸூமி* (Koizumi).

பர்மா (Burma).

ஸ்டீமர், நதிப்படகுகள்.—*புரோம்* (Prome) *முதல் தென் பர்மா* (S. Burma).

ஸ்டீமர் படகுகள்.—*கிஸ்ஸராய்ங்* (Kisseraing).

5—4—45. (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தளவாட டெப்போக்கள்.-*இன்கோல்ஸ்டாட்* (Ingolstadt), *காரபன்வோர்* (Grafenwohr).

ரயில் இலக்குகள்.—*நூரம்பர்க்* (Nuremburg), *பாய்ர்பத்* (Bayrfuth), *பிலாமன்* (Blamen).

விமான நிலயம்.—*உண்டர்ஸ்லாயர்ஸ்பாச்* (Unterschlauerspach).

ரயில்வே போக்குவரத்துகள்.—*வட இதாலி* (N. Italy), *யூகோஸ்லாவியா* (Yugoslavia).

ராணுவ ஸ்தாபனங்கள்.—*தென் ஜெர்மனி* (Southern Germany). *ஆஸ்திரியா* (Austria).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—*ஓகினுவா* (Okinawa).

பர்மா (Burma).

துவியல்கள்.—*ரங்கூனுக்கு* (Rangoon) *அருகில்.*

ஸ்டோர்கள்.—*தாஷியன் வடகிழக்கு* (N. E. Thazi) *பின்மனு* (Pyinmana).

பாலங்கள்.—*பர்மா* (Burma).

துருப்பு ஸ்தாபனங்கள்.—*டவுன்கூ* (Toungoo).

6—4—45. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரஸ்தா போக்குவரத்து, இதர இலக்குகள்—*ஹாம்பர்க்* (Hamburg) *முதல்* V *யுத்த அரங்கங்கள், ஹனோவர்* (Hanover).

ரயில்வே போக்குவரத்துகள்.—*விரோனு* (Verona).

எண்ணெய் இலக்குகள்.—*வட இதாலி* (N. Italy).

பம்ப்பிங் ஸ்டேஷன்.—*பார்மா* (Parma).

இரவு.—பேர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—ஹாங்காங் (Hongkong).
விமான நிலயம்.—டாயோஹாரா (Toyohara).
ஜப்பானியத் தற்காப்புகள்.—ஒகினுவா (Okinawa).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

7—4—45. (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—(87 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 25 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
விமான போக்குவரத்துகள்.—காக்லன்பிஸன் (Kohlenbissen), வெஸென்டார்ப் (Wesendorf), பார்ச்சிம் (Parchim), கால்டன்கிர்ச்சன் (Kaltenkirchen).
எண்ணெய் சேமிப்பு டெப்போ.-ஹிட்ஸாக்கர் (Hitzacker).
தளவாட டெப்போ.—கஸ்ட்ராவ் (Gustrow).
தளவாட சேமிப்பு.—டேன்பர்க் (Duneburg), கிரம்மல் (Krummel).
ரயில்வே தளங்கள்.-லுன்பர்க் (Luneburg), கிரம்மல் (Krummel).
சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேமிக்குமிடங்கள்.-விரோனு (Verona), பெரெஸ்ஸியா (Brescia).
ரயில்வே பாலம்.—டிராவா (Drava) நதி.
இலக்குகள்.—பிரென்னர் (Brenner).
விமானச்சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
இரவு.—பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—டோக்கியோ (Tokyo), ஒகினுவா (Okinawa).

பர்மா (Burma).

துவியல்கள்.—மோல்மின் (Moulmein).
துருப்பு முகாம்கள்.—தாஸி தென்கிழக்கு (S. E. of Thazi).
சப்ளைகள்.—டாங்குப் (Taungup).
ரயில்வே ஸ்டேஷன்.—ரங்கூன் (Rangoon), மாண்டலே (Mandalay).
ஜப்பானிய ஸ்தலம்.—அரக்கான் (Arakan).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—ருஇவா (Ru-Ywa).
இலக்குகள்.—டாங்குப் (Taungup).
ரேடியோ ஸ்டேஷன்.—ஸாண்டோவே (Sandoway).
துருப்பு முகாம்கள்.—புரோம் (Prome).
எதிரி முகாம்கள்.—வடக்கு யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

2—4—45. (திங்கட்கிழமை).
to
5—4—45. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமானநடவடிக்கை இல்லை.

6—4—45. (வெள்ளிக்கிழமை).
to 8—4—45. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

அமெரிக்க சைனியங்கள்.—ஒகினுவா (Okinawa). (590 ஜப்பானிய விமானங்கள் இதுவரையில் சுட்டுத்தள்ளப்பட்டன).

யுத்தக் குறிப்புகள்.

மேற்குப் போர்முனை. எப்ரல் 9-ம் தேதியன்று லண்டனிலிருந்து கிடைத்த தகவல்களிலிருந்து பிரிடிஷ் இரண்டாவது சேனையைச் சேர்ந்த கவசம்பூண்ட படைகள் பிரெமனின் சுற்றுப்புறங்களுக்கு வந்துவிட்டது. அமெரிக்க 9-வது சேனை கிரப்ஸ் தொழிற்சாலைகளுள்ள எஸ்ஸன் தெருக்களில் போர்புரிந்து வருகிறது. அமெரிக்க 1-வது சேனை பெர்லினுக்கு 140 மைல்களுக்குள் வந்துவிட்டது அமெரிக்க 3-வது சேனை செகோஸ்லாவேக்கியா எல்லைக்கு வந்துவிட்டது. கனடியப் படை வடக்குக் கடல் துறைமுகமான எம்டனை நோக்கி முன்னேறி வருகிறது. ரூர் பகுதியில் போர்முனை 25 மைல் சுற்றளவுக்குக் குறைக்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

வடக்குப் பகுதி. மேற்குப் போர்முனையின் வடக்குப் பகுதியில் பிரிடிஷாரும், கனடியர்களும்தானிருந்து வருகிறார்கள். அமெரிக்க 9-வது சேனை பீல்ட்மார்ஷல் மாண்ட்காமரியின் தலைமையிலிருந்து ஜெனரல் பிராட்லியின் கமாண்டுக்கு மாற்றப்பட்டுவிட்டது. 21-வது சேனைப்பகுதி 12-வது சேனைப் பகுதிக்கு மாற்றப்பட்டுவிட்டது. இதற்குத் தகுந்த காரணங்கள் உள. பிராட்லி நான்கு

சக்திவாய்ந்த சேனைகளைக் குவித்திருக்கிறான். மத்திய ஜெர்மனிக்குள் செல்ல அமெரிக்க 1-வது, 3-வது, 9-வது, 15-வது சேனைகள் தயாராக இருக்கின்றன. ரூர் பகுதியைக் குறுக்குவதற்கு அமெரிக்காதான் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியதினால், இருபக்கங்களிலிருந்தும் தாக்க பிராட்லிக்கு 9-வது, 1-வது சேனைகளின் ஒன்றுபட்ட உதவி அவனுக்கு வேண்டும்.

மேலும் ரூர் போரில் அவருடைய முயற்சி முடிந்துவிட்டதாலும் ரூரிலுள்ள ஜெர்மானியர்களைத் துடைப்பதுதான் பாக்கியிருப்பதினாலும் மாண்ட்காமரி அவருடைய நடவடிக்கைகளை வடக்கு ஹாலந்துக்கும் வடக்கு ஜெர்மனிக்கும் மாற்றிக்கொண்டுவிட்டார்.

வி வி வி வி வி

மாண்ட் காமரியின் நடவடிக்கைகள். தேச படத்தைக் கவனித்தால் அவர் ஆரம்பித்திருக்கும் நடவடிக்கைகள் நன்கு புலப்படும். ஹாலந்திலிருந்து ஜெர்மானியர்கள் பின்வாங்கியதற்கு, டச்சுக் கடற்கரையில் அகப்பட்டுக்கொள்வோம் என்ற பீதிமட்டும் காரணமல்ல. வடமேற்கு ஜெர்மனியை இழந்து அத்துடன் நார்வேயிலிருந்து பிரிடன் பேரில் யுத்தம் தொடுப்பதையும் இழந்துவிட நேரிடுமென்ற பீதியும் காரணமாகும். பிரெமனும், வில்ஹெல்ம்ஷாவனும், எம்டனும், கீலும் விழுந்துவிட்டால், நார்வேயும் டென்மார்க்கும் போய்விடும். வடக்குப் பகுதியில் முன்னேறிவரும் ருஷ்யர்கள் பால்டிக் கடற்கரையில் பிரிட்டிஷாருடன் ஒன்று சேர்ந்துவிடுவார்கள்.

வி வி வி வி வி

V. வெடிகுண்டுகள் புறப்படும் இடங்கள். V. வெடிகுண்டுகள் புறப்படும் இடங்களுக்காகப் போரை நடத்துவதுதான் பிரிடனுக்கு முக்கியமானது. சூடர் சீ நதிக்கு உபநதியான இஞ்சல் நதி ஓரமாக முன்னேறிவரும் கனடியர்கள் ஹார்லம், ஹேக், ராட்டர்டாம், ஆம்ஸ்டெர்டாம் முதலிய இடங்களுக்குட்பட்ட சதுக்கத்திலுள்ள ஜெர்மன் படைப் பகுதிகளைத் தாக்கச் செல்லுகின்றன. அந்த இடத்திலிருந்துதான் V. வெடிகுண்டுகள் புறப்படுகின்றன. அந்த சதுக்கத்துக்கும் ஜெர்மனிக்குமுள்ள போக்கு வரத்து மார்க்கங்கள் துணிக்கப்பட்டுவிட்டன. எதிரி ஹார்லந்துக்குள் வாபஸ் ஆகிவருகிறான் என்று தகவல்கள் கிடைத்துவருகின்றன. இப்பொழுது அநேக நாட்களாக V. குண்டுகளின் வீச்சு கிடையாது.

ஆகிலும் இன்னும் பூர்ணமான வெற்றி கிடைத்தபாடில்லை. இப்பொழுது கிடைத்திருக்கும் வெற்றி உறுதியாகவும் சாவதானமாகவும் ஏற்பட்டது. 1943-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் பிரிடிஷ் விமானப்படை பால்டிக் கடற்கரையிலுள்ள ரகசிய நிலயமான பீனமுண்டி பேரில் வெடிகுண்டுகளைப் போட்டு ஒட்டியில்லா வெடிகுண்டு நிலயங்களை அழிக்க முற்பட்டது. அடுத்தபடியாக பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க 8-வது, 9-வது விமானப்படையும் V குண்டுகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை தாக்கின. அதன் பின் 1943-ம் வருஷ முடிவில் வடக்கு பிரான்ஸிலுள்ள V குண்டுகள் புறப்படும் ஸ்தலங்கள் பேரில் ஏராளமான வெடிகுண்டுகள் போடப்பட்டன. மேற்குப் போர்முனை ஆரம்பிக்கப்பட்ட பின்னும் பிரெஞ்சுக் கடற்கரையிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட பின்னும் எதிரி அவனுடைய கெட்ட நடவடிக்கைகளை ஹாலந்திலிருந்து நடத்தி வந்தான். அங்கிருந்தும் இப்பொழுது அவன் துரத்தியடிக்கப்படுகிறான்.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. ஹங்கேரி பூராவும் விடுவிக்கப்பட்டது. செக்கோஸ்லாவேக்கியாவின் விடுதலை வெகுதூரத்திலில்லை. வடக்கில் பிரஷ்யாவின் தலைநகரமான கோனிஸ்பர்க் விழுந்து விட்டது. தெற்கில் வியன்னாவும் விழும் தருவாயிலிருந்து வருகிறது. யூகோஸ்லாவியாவில் சாராஜிவோ விடுவிக்கப்பட்டது. கிழக்கிலுள்ள நேசதேசப்படைகளுக்கும் வடக்கு இதாலியிலுள்ள படைகளுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் சமயம் நெருங்கி விட்டது.

வி வி வி வி வி

இதாலி. இதாலியிலுள்ள நேசதேச கமாண்டரான ஜெனரல் மார்க்கிளர்க் சமீபகாலத்தில் பின் வருமாறு ஒலி பெருக்கினர். ' வசந்தகாலம் ஆரம்பமான உடன் என்னுடைய படைகள் ராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தயாராக இருக்கும். கூடிய சீக்கிரத்தில் எதிரியின் தற்காப்புகள் நொறுக்கப்படும். ஆகையால் இதாலிய தேசாபிமானிகள் எங்களுக்கு உதவத்தயாராக இருக்கவேண்டும்.'' "கூடிய சீக்கிரத்தில் உங்களை நாங்கள் பெர்லினில் சந்திப்போம்" என்று நினைக்கிறேன் என்று 8-வது சேனைக்கு பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி ஒரு செய்தியை

அனுப்பியிருக்கிறார். இதாலியில் மறுபடியும் சுறு சுறுப்பு ஏற்பட்டு விட்டது. 8-வது சேனையைச் சேர்ந்த படைகள் கொமாகியோ ஏரிக்கும் ஆட்ரியாடிக் கடலுக்கும் மத்தியிலுள்ள இடத்தில் இறங்கி விட்டன. கடலுக்கும் ராவன்னாவுக்கு வடகிழக்கிலுமுள்ள பொடி பிரிமாரோவுக்கும் மத்தியில் முன்னேறிவிட்டார்கள். வழக்கம்போல் ஜெர்மனி வெள்ளப்பெருக்கு ஏற்படுத்தி விட்டது. மற்றொரு பக்கத்திலுள்ள 5-வது சேனை மாஸ்ஸா மலையைப் பிடித்தது. ஸ்பிஸியா என்ற மகத்தான கடற்தளத்தை நோக்கி முன்னேறி வருகிறது.

வி வி வி வி வி

சங்கடமான நிலைமை. ஜெர்மானியர்கள் நான்கு திசைகளிலிருந்தும் பின்வாங்கும்படி துரத்தியடிக்கப்படுகிறார்கள். சைலீஷியா போய் விட்டது. ரூரும் போய்விடும். அத்துடன் புதிய தளவாட உற்பத்தியும் நின்றுவிடும். பிரயோஜனமற்ற போரை நடத்தாமல் வயல்களுக்குச் சென்று அறுவடையைக் கவனியுங்கள் என்று ஜெனரல் ஐசன்ஹவர் ஜெர்மானியர்களுக்கு போதித்துவருகிறார். ஆகிலும் ஜெர்மானியர்கள் உடன் காலத்திலேயே போரை நிறுத்திவிடுவார்கள் என்ற ஹேஷ்யங்கள் காணப்படவில்லை. ஹனோவர், பிரமன், பிரன்ஸ்விக், ஹாம்பர்க் முதலிய இடங்களில் பொசுக்கும் வேலை செய்து அவைகளை நாசம் செய்துவிட்டு, மத்திய ஜெர்மனியிலுள்ள சமவெளிகளைக் கைவிட்டு விட்டு, மேற்கு கிழக்குச்சேனைகளை ஒன்றுபடுத்தி இறுதிப் போரை நடத்துமென்று ஊகிக்கப்படுகிறது. அதற்கு வெற்றிகிடைக்க மார்க்கமுண்டா? நமக்குத் தெரிந்தமட்டில் ஒன்றுமில்லை. மேற்கிலுள்ள ஜெர்மன் படைகள் சின்னபின்னம் ஆகிவிட்டன. தென்கிழக்கு ஹங்கேரியிலிருந்த சேனையும் அவ்விதம் நாசமாகிவிட்டது. பால்டிக்கிலிருந்த படைகளும் நிர்மூலமாகிவிட்டன. பிரான்ஸை ஒட்டியுள்ள அட்லாண்டிக் சுடற்கரையில் மூன்று டிவிஷன் படைகளும் ஹாலந்தில் 5 டிவிஷன் படைகளும் இதாலியில் சில படைகளும் இருக்கின்றன. அவைகள் திரும்பி ஜெர்மனிக்கு வரமாட்டா.

வி வி வி வி வி

கீழறுப்பான் போர். போரில் தோல்வி அடைந்தபின் எதிரி கொரில்லாப் போரை நடத்தியும் போரிடுவானென்று ஜனாதிபதி ரூஸ்வெல்டிக்கு ஜெனரல் ஐசன்ஹவர் எழுதியிருக்கிறார். எதிரி நிச்சயமாய் சரணாகதி செய்து விடுவானென்றாலும் அவன் கொரில்லாப் போரை நடத்திவருவான் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் போரை ஒரு விளம்பரம் மூலம் நின்றுவிட்டதாக பிரகடனம் செய்ய வேண்டியதுதான். ஜெர்மன் நிர்வாகம் சரணடைந்தால் ஜெர்மன் கொரில்லாக்களை கலகக்காரர்கள் என்று மதிக்கவேண்டும். அது நடைபெறுததால் கொரில்லாக்களை அடக்குவதற்கு வெகுகாலமாகும்.

வி வி வி வி வி

ஹிம்லரின் ஆயத்தங்கள். ஹிம்லரும் அவனுடைய நாஸிக்கூட்டத்தாரும் ஈஸ்டர் விடுமுறையை பிரெகென்ஸ் என்னும் பவேரியா நகரத்தில் கழித்து பவேரியா மலைகள், ஆஸ்திரியன் டைரால், வடகிழக்கு இதாலி முதலிய இடங்களிலிருந்து எதிர்த்துப் போராடுவது என்ற திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். இதற்கு கோட்டர்டாமெரஸ்க் என்று பெயருண்டு. இங்கு ஏராளமான யுத்த தளவாடங்களும் உணவுப்பொருள்களும் ஒளித்துவைக்கப்பட்டிருக்கின்றன. வடக்கு, மத்திய ஜெர்மனியிலுள்ள எல்லா நாஸிகளும் இங்குவந்து கூடுவார்கள். நிகுதியான போரை நடத்துவதாக அவர்களுக்கு உத்தேசமில்லை. அவர்கள் நாசவேலையை மேற்கொள்ளுவார்கள்.

தெற்கு அரண் என்று சொல்லக்கூடிய இந்த பிரதேசத்தை மேற்கிலிருந்து பாட்டனும் கிழக்கிலிருந்து டால்பூகினும் சுற்றி வளைத்து வருவதால் இந்த திட்டமும் பயன்படாதென்பதை நாஸிகள் அறியவேண்டும்.

வி வி வி வி வி

கொலை. கீழறுப்பான் வேலை என்பது ஏற்பாடான கொலை முறை. இதில் நாஸிகள் நிபுணர்கள். சென்ற வருஷம் ஜூலை மாதம் 20-ம் தேதியன்று ஹிட்லரைக் கொலை செய்ய முயன்ற பொழுது ஹிம்லர் ஏராளமான ஜெர்மானியர்களைக் கொலை செய்ய முயன்றான். அதன்பின் சந்தேகத்துக்குட்பட்ட அநேக நாஸிகள் கொலை செய்யப்பட்டார்கள். ஆகனுடைய நகரபரிபாலன சபை மேயரும் இன்னும் நால்வரும் கொலை செய்யப்பட்டது இதற்கு உதாரணமாகும். மற்ற சில உதாரணங்கள் பின்வருமாறு. எயிலாசாபலிலுள்ள வியாபாரியான ஆபர்ஸெலனும், மெயிட்ஸனிக்கிலுள்ள உபாத்தியாயரும் நேசதேசத்தாரிடம் உத்தியோகங்களை ஏற்றுக்கொண்டதற்காகக் கொலை செய்யப்பட்டார்கள்.

ராணுவ முறையில் தோற்று விட்டாலும் மற்ற வழிகளில் போரில் வெற்றி பெறலாமென்று நாஸிகள் இன்னமும் நினைத்து வருகிறார்கள். சுயநலத்தை உத்தேசித்து எதிரி நகரங்களை அழிக்கவும் தேசத்தார்களைக் கொலை செய்யவும் தயாராக இருக்கிறான். அராஜகத்திலிருந்து அவனுடைய தேசத்தை புனருத்தாரணம் செய்யலாமென்றும் அவன் நம்பியிருக்கிறான். இறுதியில் வெற்றி நமக்குத்தான் என்று ஹிம்லரும் அவனுடைய கோஷ்டியார் சொல்லி வருவதின் அர்த்தம் யாதெனில் ராணுவ வெற்றியில்லாமல் 10 அல்லது 15 வருஷங்கள் கிரமித்து ராஜீய வெற்றி என்பதுதான். அப்பொழுது பிடித்த ராஜ்யங்களைப் பங்கு போடுவதில் நேசதேசத்தார்களுக்கிடையே மனஸ்தாபங்கள் ஏற்படுமென்றும் ஐரோப்பாவிலுள்ள அராஜகத்தையும் வறுமையையும் அவர்கள் அகற்ற முடியாமல் போய்விடுமென்றும் எதிரி எதிர்பார்த்திருக்கிறான். தாஸ்ரெக் என்ற வாரப்பத்திரிகையில் "ஜெர்மன் நடவடிக்கையின் முக்கியகொள்கை நீண்ட காலத்துக்குரியது, நேசதேசத்தார்கள் இப்பொழுது உள்ள நெருக்கடியை தீர்த்துவிட முடியாது. ஜெர்மனியைப் பங்கு போடும்பொழுது அவர்களுக்குள் சச்சரவு ஏற்படும்" என்று கோயபல்ஸ் எழுதியிருப்பது மேலே சொல்லிய அபிப்பிராயத்தை ஒட்டித்தான்.

வி வி வி வி வி

ஜெர்மன் சுதந்திர இயக்கம். ஆகையால் ஹிட்லரின் நம்பிக்கை நேசதேசத்தாருக்குள் சச்சரவு ஏற்படும் என்பதை ஆதாரமாகக்கொண்டது. இதனால் தான் ராணுவத் தோல்வி இனிமேல் தவிர்க்கமுடியாததென்று முடிவு செயதிருக்கும் ஜெர்மன் யுத்த சபை, வெண்மைக் கொடியை காண்பிக்கிறவர்களுக்கும் அல்லது எதிரிகளுடன் சம்பந்தப்படுகிறவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுமென்று உத்தரவிட்டிருக்கிறது. இதற்காக ஜெர்மன் சுதந்திர இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் மூலம் ஜனங்கள் கொரில்லாப் போரை நடத்த தூண்டப்படுகிறார்கள்.

வி வி வி வி வி

சான்பிரான்ஸிஸ்கோ. நேசதேசத்தார்களிடையே பிளவை எதிர்பார்த்து நிற்கும் எதிரி சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் ஓட் உரிமையைப் பற்றி ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சியை வரவேற்கிறான். சந்தோஷப்படுவதற்கு யாதொரு முகாந்திரமுமில்லையென்று எதிரி கூடிய சீக்கிரத்தில் கண்டுவிடுவான். மூன்று பெரிய வல்லரசுகளும் விஷயம் தெரிந்தவர்கள் தான். ஓட்டு சம்பந்தமான சச்சரவினால் வெற்றியை இழந்துவிடும் நிலைமை அடையக் கூடாதென்று அவர்கள் அறிவார்கள். மூன்று வல்லரசுகளும் இதற்கு முன் டெகரானிலும் யால்டாவிலும் ஒன்றுபட்டுவிட்டார்கள். மறுபடியும் அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால் ஓட்டுகள் பிரமாதமானவையல்ல. இழ்ச்சியடைந்த ஹேக் மகாநாட்டிற்கும் வெற்றி பெறப்போகும் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கும் இதுதான் வித்யாசம். மூன்று வல்லரசுகளும் ஒரு திட்டத்தை நிறுவிவிட்டால் மற்ற சிறிய நாடுகள் அவைகளைப் பின் பற்றவேண்டியது தான். சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின் முடிவுகள் ஓட்டுகளினால் பாதிக்கப்படாதென்றும் நியாயமும் நீதியும் தான் மேலோங்கி நிற்கும் என்றும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அறிவார். ஆகையால் தான் அவர் 3 ஓட்டுகள் வேண்டுமென்ற அமெரிக்க பாத்தியதையை வாபஸ் வாங்கிவிட்டார். இந்த விஷயத்தை நன்கு மதித்து 37 தேசங்கள் மகா நாட்டிற்கு வர சம்மதித்துவிட்டன.

வி வி வி வி வி

ஸ்மட்ஸ். இது விஷயத்தில் ஸ்மட்ஸ் தெளிவாகப் பேசியுள்ளார் அவர் பின் வருமாறு எச்சரிக்கை செய்திருக்கிறார். "யுத்தத்தில் வெற்றி நிச்சயம் என்பது போல் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடும் வெற்றிகரமாக முடிவடையும் என்பதற்கு நேசதேசத்தார்களிடையே சரியான ஆர்வம் காணப்படவில்லை என்ற ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன. சிறந்த அமைப்புள்ள சர்வதேச சங்கம் மறைந்ததற்கு அமெரிக்க ஆதரவு இல்லாதது தான் காரணம். அமெரிக்கா சர்வதேச சங்கத்தில் கலந்துகொண்டிருந்தால் நாம் இன்று காணும் கஷ்டங்கள் நேர்ந்திருக்காது. டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டிலும் யால்டாவிலும் நிறுவப்பட்ட திட்டங்கள் பழைய சர்வதேச சங்கத்திலிருந்து மாறுபட்டவைகள். ஆகிலும் உயர்வான எண்ணமிருந்தால் மட்டும் போதாது. யுத்தத்தை தவிர்க்கவேண்டுமானால் மூன்று வல்லரசுகளும் ஒன்றுபட்டு சிறிய தேசங்களின் சார்பாக சமாதானத்தை நிலை நாட்டபொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். இந்தப் புதிய சமஷ்டி விவகாரத்துக் குறிய சமாஜமில்லை. அதில் ஒவ்வொரு சிறிய நாடும் பெரிய வல்லரசுகளுடன் சமமான அந்தஸ்து பெறமுடியாது. சிறிய வல்லரசுகள் பெரிய வல்லரசுகளிடம் அதிகாரத்தை ஒப்புவித்து சமாதானத்தைக் கலைப்பவர்கள் பேரில் அவர்கள் கடுமையான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளும்படி செய்யவேண்டும். சிறிய நாடுகள் நவீன யுத்த ஆயுதங்களையும் யுத்த முறைகளையும் சமாளித்து நிற்கமுடியாது. தன்னைத்தானே சிறிய தேசங்களும் காப்

2

பாற்றிக்கொள்ள முடியாது. அவர்கள் அந்த வேலையை பெரிய வல்லரசுகளிடம் ஒப்படைத்து அவைகளுக்கு சலுகைகளையும் காட்டவேண்டும். இது ருசிகரமாக இல்லாவிட்டாலும் அவசியமானது தான். பெரிய வல்லரசுகளும் அதிகாரத்தை நியாயமான முறையில் உபயோகித்து வரவேண்டும். இதனால் தான் நாம் சாம்ராஜ்ய நாடுகளின் மகாநாட்டின் நியாய சபையை ஏற்படுத்தவேண்டிய சிபார்சை நாம் வறவேற்கிறோம்.

வி வி வி வி வி

ஓகினவா. அமெரிக்கர்கள் முன்னேறிவரும் இந்தத்தீவு குறுகலாக 60 மைல்கள் நீளமுள்ளது. எந்த இடத்திலும் அது ஒரு சில மைல்களுக்கு மேல் அகலமாக இல்லை. அதன் தலைநகரம் நாடியா என்பது. அதில் சில நல்ல துறைமுகங்களும் இருக்கின்றன. நாடியாவுக்குத் தெற்கில் ஒரு ஜப்பானிய விமான தளமிருக்கிறது. 350 மைல்கள் அப்பாலிலுள்ள ஜப்பானில் படையெடுக்க அடுத்த சிறந்த பாய்ச்சல் ஸ்தலம். பிரிடிஷ் கடற்படை இங்கு அமெரிக்கர்களுக்கு உதவிசெய்து வருகிறது. ஓகினவாவுக்கு சமீபத்தில் ஜப்பானிய கடற்படைக்கு படுதோல்வி ஏற்பட்டது. ஜப்பான் 6 யுத்தக் கப்பல்களை இழந்தது. யாமாடோ என்ற சூபர்டிரெட் நாட்டும், இரண்டு சஞ்சாரிகளும் மூன்று நாசகாரிகளும்தான் மூழ்கடிக்கப்பட்டவை. இப்போரில் பிரிடிஷ் கடற்படை ஈடுபட்டது. அமெரிக்காவுக்கு மூன்று நாசகாரிகள் நஷ்டம்.

வி வி வி வி வி

ருஷ்ய-ஜப்பானிய ஒப்பந்தம். 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13-ம் தேதியன்று ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்ட நடு நிலமை ஒப்பந்தத்தை ருஷ்யா ரத்து செய்துவிட்டது. ஜப்பான் ஜெர்மனிக்கு உதவியளித்து வருவதாலும் பிரிடனையும் அமெரிக்காவையும் எதிர்த்துப் போராடுவதாலும் இனிமேல் நடு நிலமை வகிப்பது சாத்தியமில்லையென்று ருஷ்யா சொல்லிவிட்டது. இது இருநாடுகளுக்குள்ளும் ஏற்படக்கூடிய தகசலுக்கு ஆரம்பம். இது வலுப்பட்டு பகிரங்கமான போரில் முடிவடைந்துவிடும். ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் கணக்கு முடிக்கவேண்டிய இனங்கள் பாக்கியிருக்கின்றன. யால்டாவிலும் அதற்கு முன்னும் வெளிப்புற மங்கோலியாவிலும் மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் ருஷ்யக் கண் காணிப்பு ஏற்படுத்துவதற்கு பிரிடனும் அமெரிக்காவும் ஒப்புக்கொண்டனவென்று நம்பப்படுகிறது. பஸிபிக் போரில் ருஷ்யாவும் பங்கெடுத்துக்கொண்டால் ஜப்பானிய யுத்தம் வெகு சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும். உடன்படிக்கை ரத்தான போதிலும் இன்னும் ஒரு வருஷம் வரையில் அதன் ஷரத்துக்கள் அமுலிலிருக்கு மென்று ஜப்பான் எண்ணுகிறது.

வி வி வி வி வி

ஜப்பான். காயிஸோவும் அவனுடைய மந்திரி சபையும் ராஜீனமாச் செய்துவிட்டான். 80 வயது உள்ள சூசுகி பதவி ஏற்றுவிட்டான். காயிஸோவின் வீழ்ச்சிக்கு பிலிப்பைன்ஸ், ஐவோஜிமா, ஓகினவா, மாண்டலேத் தோல்விகள் தான் காரணங்கள்.

வி வி வி வி வி

பிரிடிஷ் தூரக்கிழக்கு கடற்படை. டோக்கியோ ஒலிபரப்பிலிருந்து கிடைத்த செய்தியிலிருந்து பிரிடிஷ் கடற்படை, தெற்கு பர்மாவையும் மலேயாவையும், கிழக்கு இந்தீஸையும் தாக்க இந்துமகா சமுத்திரத்தில் குவிக்கப்படுகிறதென்று தெரியவருகிறது. இருவகைப்பட்ட நடவடிக்கைகளுக்காகத்தான் தென் கிழக்கு ஆசியா கமாண்டுக்கு லூயி மௌண்ட்பாடன் பிரவு நியமிக்கப்பட்டார். மாண்டலே வெற்றி தரையில் கிடைத்த வெற்றியாகும். ஐரோப்பிய யுத்தம் முடிந்ததும் கிழக்குப்போர்முனைக்கு கடற்படையும் விமானப்படையும் சென்றுவிடும்.

வி வி வி வி வி

பஸிபிக் கடற்படை. இது வேகமும், திறமையும், விமானப்படையுடன் ஒன்றுபட்டதுமான நடவடிக்கையைத் துவக்கிவிட்டது. 1941-ம் வருஷத்தில் இருந்த கடற்படை தளங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணம் மறைந்துவிட்டது. கடற்படை தளமென்பது கடற்படை, விமானப்படைக்கு சர்ப்பராக்களையும் பழுது பார்க்கும் தளங்களையும் வைத்திருக்கும் கடற்படைதான்.

வி வி வி வி வி

டாங்குப்பின் வீழ்ச்சி. இந்தவாரத்தில் அது வீழ்ச்சி பெற்றுவிட்டது. அத்துடன் அரக்கான் நடவடிக்கை முடிவடைந்துவிட்டது.

எப்பொழுதும் துடித்துவரும் ஹிருதயம்.

லண்டனுக்கு மிஸ்ட்டர் மாரிஸனின் பாராட்டு.

"லண்டனின் வெற்றி" கண்காக்ஷியை லண்டனிலுள்ள லெஸ்டர் சதுக்கத்தில் திறந்து வைத்தபொழுது உள்நாட்டு காரியதரிசியும் உள்நாட்டு பாதுகாப்பு மந்திரியுமான மிஸ்ட்டர் ஹெர்பர்ட் மாரிஸன் பின்வருமாறு சொன்னர்.:—

"இந்த கண்காக்ஷியைப் பற்றியுள்ள பெருமைகளில் "லண்டன் வெற்றிகரமானது" என்ற தலையங்கம்தான் முக்கியமானது. லண்டனைப்பற்றி நானும் அவ்விதம்தான் அபிப்ராயப்படுகிறேன்.

"இந்த யுத்தத்தில் லண்டனிலுள்ள ஜனங்கள் செய்திருக்கும் சேவையை மிகைப்படுத்த முடியாது. புகழ்பெற லண்டனுக்கு இருகாரணங்களுண்டு. நமது பொதுமக்களை மகத்தான முறையில் தாக்க எதிரி உத்தேசித்தபொழுது அவன் லண்டனைத்தான் லக்ஷியமாகப் பொருக்கியெடுத்தான். தேசத்தின் மற்ற பாகங்களுக்கும் உலகத்திலுள்ள எல்லா சுதந்திர மக்களுக்கும் லண்டன்தான் வழிகாட்டியாக இருந்தது. விமான நடவடிக்கையை எதிர்த்து நின்றதில் லண்டன் ஜனங்கள் சாச்வதமான புகழைப் பெற்றுவிட்டார்கள்.

"லண்டன் கியாதிபெற்றதற்கு இது ஒரு காரணம். யுத்த ஆரம்பத்திலிருந்து இறுதி வரையில் யுத்த முன்னணியிலிருந்து வந்ததில் ஐரோப்பாவில் லண்டன்தான் கியாதி பெற்றிருக்கிறது. அது 1940-ம் வருஷம் ஆகஸ்டுமாதத்தில் போர் வட்டாரத்திற்குள் சென்றது. இந்த கோரமான யுத்தத்தின் இறுதி கட்டத்திலும் லண்டன் போரை நடத்தி வருகிறது.

"லண்டன் வாசிகள் இவ்வளவு காலமாக கஷ்டங்களை எவ்விதம் சகித்துவந்தார்களென்பதை லண்டனில் ஐந்துவருடங்களாக வசித்துவந்தவர்கள்தான் அறியக்கூடும். லண்டன் என்ற கோட்டை அடிக்கடி தாக்கப்பட்டு வந்திருக்கிறது. அதன் படைகள் சாதாரண மனிதர்கள்தான். குண்டு வீச்சையும் பொருட்படுத்தாமல் தங்களுடைய தினசரி அலுவல்களை கவனித்துவந்தவர்கள் ஆடவர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும்தான்.

"லண்டனில் அபாரமான உயிர்ச் சேதம் ஏற்பட்டது. அநேகர்கள் படுகாயம் அடைந்தார்கள். காட்டுமிராண்டியான ஒரு எதிரி பிரயோகிக்கும் சகலவிதமான நாசத்திற்கும் லண்டன் உட்பட்டிருந்தது. ஆகிலும் முதல் அடி விழுந்தபொழுது அது ஏற்றுக்கொண்ட நடவடிக்கைகளை அது கடைசிவரையில் பின்பற்றிவருகிறது. நேசதேசத்தாரின் மேற்குமுனை வெற்றிகளுக்கு லண்டன்தான் ஹிருதயம் போன்றது. அந்த ஹிருதயம் எப்பொழுதும் துடித்துக்கொண்டிருந்தது.

"நமது லண்டன் சிறந்த பழமையான நகரம். அது சுதந்திர முறையைக் கைவிட்டுவிடவில்லை. அது இனிமேலும் அவ்விதம் செய்யக்கூடாதென்று நாம் உறுதிகொள்ளுவோம்".

நாஸிகளின் முயற்சி வீணுகிவிட்டது.

நேசதேசத்தார்களின் முன்னேற்றம்.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

மேற்கிலிருந்து வரும் தகவல்கள் சிலாக்கியமாக இருக்கின்றன. ஆகிலும் யுத்த சரித்திரத்திலேயே மிகவும் பலமான வெடி குண்டு வீச்சுக்குட்பட்ட ஒரு பிரதேசத்தில் முன்னேறி அதைப் பயன்படுத்திக்கொள்ளுவதில் சில குறிப்பான வரையரைகளிருக்கின்றனவென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஜெர்மனிக்குள் ஒவ்வொரு மணியிலும் கவசம் பூண்ட படைகள் முன்னேறி வரும்பொழுது தினசரி தகவல்களைப்பற்றி வியாக்யானம் எழுதுவது சாத்தியமற்றது. ஆகையால் முடிவைப் புலப்படும்படி செய்த சில முற்போக்கான விஷயங்களைப்பற்றி நான் பேச விரும்புகிறேன்.

முதலாவதாக, ரைன் நதியைத் தாண்டுவதற்கு ஆயத்தங்களை மாண்ட்காமரி துரிதமாகச் செய்து முடித்த வேகம். பிப்ரவரி மாதம் 8-ம் தேதியன்று முதலாவது கனடிய சேனை மாஸ் நதிக்கும், ரைன் நதிக்கும் மத்தியில் தெற்கு நோக்கித் தாக்க ஆரம்பித்தது. பிப்ரவரி மாதம் 23-ம் தேதிக்குப் பின்தான் ஜெனரல் ஸிம்ப்ஸனின் ஒன்பதாவது அமெரிக்க சேனை

ஒத்துழைத்தது. அப்பொழுதுதான் உடைபட்ட ரோயர் அணையிலிருந்து உண்டான வெள்ளப்பெருக்கு அடங்கி அந்த நதியைத் தாண்ட வசதி ஏற்பட்டது. மார்ச்சு மாதம் 24-ம் தேதியன்று 21-வது சேனையைச் சேர்ந்த படைகள் ரைன் நதியைத் தாண்டி முன்னேறும் வாசலை ஏற்படுத்திவிட்டது. மார்ச்சு மாதம் 25-ம் தேதி சாயங்காலத்தில் எல்லா முன்னேறும் வாசல்களும் ஒன்றுபட்டு 30-மைல்கள் நீளமும் 7-மைல்கள் அகலமும் உள்ள தற்காப்புகளாக மாறிவிட்டன. 21-வது சேனை இருந்த பகுதியில் ஜெர்மனியின் சிலாக்கியமான படைகள் குவிக்கப்பட்டிருந்தபோதிலும் படைகள் அதிக நஷ்டமன்னியில் நதியைத் தாண்டியதற்கு பீரங்கிகளாலும் விமானங்களாலும் ஜெர்மன் முன்னணி தளங்களை வெடி குண்டுகளால் நொருக்கியதுதான் காரணமாகும்.

அடுத்தபடியாக ருசிகரமானது பீல்ட் மார்ஷல் எவ்விதம் விமான மூலம் வந்த துருப்புகளை உபயோகப்படுத்தினர் என்பது. இதற்கு முன் விமானமூலம் படைகள் சென்ற செப்டம்பர் மாதத்தில் ஹாலந்தில் மூன்று பகுதிகளாக போர்ப்படைகளிலிருந்த இடத்திலிருந்து 60-மைல்களுக்கப்பாலிலுள்ள ஆர்ண் ஹெமில் இறங்கியிருக்கின்றன.

விமான மூலம் இறங்கிய படைகளுக்கும் தரைப் படைகளுக்கும் தொடர்பு ஏற்படுத்த அந்த தூரம் ஜாஸ்தியாக இருந்ததென்று நாம் அறிந்தோம். இப்பொழுது பாரசூட் துருப்புகளும் கிளைடர்களில் சென்றவர்களும் தரைப் படைக்கு ஏழு மைல்களுக்குள் இறங்கிவிட்டார்கள். ஆகையால் இருபடைகளுக்கிடையே தொடர்பு வெகு சீக்கிரத்தில் ஏற்பட்டது. பாலங்களை உடைபடாமல் பிடிப்பதுதான் விமான மூலம் வந்த படைகளின் லக்ஷியம். அதன் மூலம் ரைன் நதியின் கிழக்குக் கரையில் பாலமுனை அமைக்கப்பட்டபின், படைகள் முன்னேறுவதற்கு மற்றொரு தடங்கலும் இல்லாமலும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த முற்போக்கான யோஜனைக்குத் தகுந்த லாபமும் கிடைத்து வருகிறது.

அடுத்தபடியாக இதற்குமுன் இல்லாதபடி புகைப்படலம் மிகுதியாக உபயோகிக்கப்பட்டது. 60-மைல் விசாலமான புகைப்படலத்திலிருந்து அடி எங்கு விழுமென்று எதிரி கண்டு பிடித்துவிட்டான். முற்போக்காக பீரங்கிகளும் விமானங்களும் வெடி குண்டுகளை வீசியதினால் ஜெர்மானியர்கள் முன்னணி தற்காப்புகளை பலஹீனப்படுத்தும்படி நேரிட்டது. விமான மூலம் படைகள் இறங்கினால் ரைன் நதியைத் தாண்டி இறங்கும் படைகளை துரத்தியடிக்க முன்னணி தளங்களுக்கு மறுபடியும் சென்று விடலாமென்பதற்கு எச்சரிக்கை கிடைக்குமென்று எதிரி நம்பியிருந்தான். இந்த விஷயத்தில்தான் மாண்ட்காமரி அவர்களை ஏமாற்றிவிட்டான். புகைப்படலத்தைப் போட்டுவிட்டு அவனுடைய படகுகளை ஒன்று சேர்த்து அவைகள் ரைன் நதியைத் தாண்டியபின்தான் விமான மூலம் படைகள் இறக்கப்பட்டன. படை பல ஆதிக்கத்தைவிட யுத்த தந்திரத்தினால்தான் வெற்றி கிடைத்தது.

கொஞ்ச காலத்துக்கு முன் ரைன் நதி வெகு சீக்கிரத்தில் தாண்டப்படுமென்று நான் துணிவுடன் சொன்னேன். அதற்குக் காரணம் மேற்குப் போர்முனையில் நேசதேசப் படைகள் ஏராளமாக ரைன் நதி ஓரமாக வந்து விட்டார்களென்பதுதான். ஜெர்மானியர்களை ஊகிக்கும்படி செய்துவிட்டு அந்தப் படைகள் எந்த இடத்திலும் இறங்கக்கூடும். இந்த ஊகத்திற்கும் நேசதேச விமான ஆதிக்கத்தின் மூலம் தடங்கல் ஏற்பட்டது. ஆகிலும் இவ்வளவு சீக்கிரத்தில் கிடைத்த வெற்றியிலிருந்து நாம் மறுபடியும் அளவு கடந்த நம்பிக்கை கொள்ளக்கூடாது. ஆனால் 1918-ம் வருஷத்தில் நடைபெற்றதுபோல் முடிவு திடீரென்று ஏற்படலாம். ஆகிலும் யுத்தம் எப்பொழுது முடிவடையும் என்று நாம் சொல்லுவதற்கில்லை. ஆகிலும் எதிரிகளின் நடவடிக்கையைப்பற்றி நமக்கு ஒரு சூசகம் கிடைத்திருக்கிறது. ஜெர்மானியர்கள் தெற்கிலுள்ள மலை பிராந்தியத்திற்கு பின்வாங்கி விடுவார்களாம். ரூண்ட்ஸ்டெட்டுக்கு பதிலாக கெஸ்ஸல்ரிங்கு நியமிக்கப்பட்டிருப்பதிலிருந்து இது வெளியாகுகிறது.

ரூண்ட்ஸ்டெட் முதலெடுப்பில் ஒரு ஸோல்ஜர், அடுத்தபடியாகத்தான் அவர் நாஸி. கெஸ்ஸல்ரிங்க் தேர்ச்சிபெற்ற நாஸி, ஹூடன்டார்பைப்போல ரூண்ட்ஸ்டெட்டும் ஹிட்லரிடம் நாஸிகளின் ராணுவ சக்தி முறிவுபட்டு விட்டதென்று சொல்லியிருக்கக்கூடும்.

வீழ்ச்சி பெறுவதற்குமுன் ஆட்டம்.

நாஸி ஜெர்மனியின் நிலமை.

(விக்ஹாம் ஸ்டீட்).

நாஸி ஜெர்மனி ஆடிக்கொண்டிருக்கிறது. ஐரோப்பாவை அடிமைப்படுத்தி, இறுதியில் உலக ஆதிக்கம் பெற உத்தேசித்த காட்டுமிராண்டி நடவடிக்கையுள்ள ஸ்தாபனம் வீழ்ச்சி பெறும் தருவாயிலிருந்து வருகிறது. அது சப்தம் போட்டுக்கொண்டு ஓரே மூச்சில் விழுந்து

விடுமோ அல்லது அடிமேல் அடி வாங்கி தற்காப்புகள் ஒன்றன்பின் ஒன்ருக நொருங்கித் துணுக்குத் துணுக்காக நொருங்கிவிடுமாவென்பது சந்தேகமாகயிருக்கிறது.

நம்பிக்கை ஜெர்மன் மக்களிடமிருந்தும் நாஸிக்கூதியிடமிருந்தும் மறைந்துவிட்டது. நம்பிக்கையில்லாமல் மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் நடந்தாலும் நடைபெருவிட்டாலும் நம்பிக்கைக்குறைவு எங்கு பார்த்தாலும் காணப்படுகிறது. நம்பிக்கையற்று மூர்க்கத்தனமாக எதிர்த்து நிற்பதற்கு ஜெர்மனிக்கு சந்தர்ப்பம் அளிக்காமல் செய்துவிடுவதுதான் நேசதேசத்தார்களின் யுத்த தந்திரம். சென்ற சில நாட்களில் இதையொட்டித்தான் நடவடிக்கைகள் நடந்தேறியிருக்கின்றன.

சென்ற வாரத்தில் ஹிட்லருக்கும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கும் ஒரு மகத்தான நம்பிக்கை இருந்துவந்தது. மேற்குப் பக்கத்தில் நேசதேச முன்னேற்றத்திற்கு ரைன் பலமான தடையாக இருக்குமென்றும் அதனின்றும் ஏற்படும் கால தாமதத்திற்குள் ருஷ்யர்களும், பிரிடிஷாரும், அமெரிக்கர்களும் பிரயோஜனமன்னியில் தாக்கக்கூடிய தற்காப்பு உள் வளையத்தை அமைத்துவிடலாமென்றும் ஜெர்மனி நம்பியிருந்தது. ஜெனரல் ஹாட்ஜஸின் 1-வது அமெரிக்க சேனை எதிர்பாராத வண்ணம் ரெமேசனில் ரைன் நதியைத்தாண்டி பாலமுனையை ஏற்படுத்திய போதிலும் ஜெர்மானியர்கள் இந்த நம்பிக்கையை இழந்துவிடவில்லை.

ஜெர்மன் கமாண்டர்களில் தற்காப்புப்போரில் நிபுணரான கெஸ்ஸல்ரிங் இதாலியிலிருந்து கொண்டுவரப்பட்டு ரைன் நதி பிரதேசத்தில் ரூண்ட்ஸ்டெட்டுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார். ரெமேசன் பாலத்தில் சமாளித்து நிற்கலாமென்றும் மாண்ட்காமரி இருக்கும் வடக்கு பக்கத்தில் யுத்தத்தில் தேர்ச்சிபெற்ற துருப்புகளையும் கவசங்களையும் குவித்து 21-வதுசேனையை முறியடித்து தோல்விபெருமல் செய்துவிடலாமென்றும் கெஸ்ஸல்ரிங் நம்பியிருந்தான். ஆனுல் அவனுடைய திட்டம் பாழாகிவிட்டது.

1942-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் எல்அலாமீனில் துவக்கம்செய்து, 1944-ம் வருஷத்தில் வேனிர்காலத்தில் நார்மண்டிக்கரையில் படைகள் இறங்கின வரையிலும், 1945-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ரைன் நதியின் வடக்குப் பகுதியில் தாக்கியபொழுதும் எதிரியால் நிச்சயமாக சமாளித்து நிற்கமுடியாதென்று தெரிந்தபின்தான் மாண்ட்காமரி தாக்க ஆரம்பித்தான். உயர்தர கமாண்டரான ஈசன்ஹவருடன் நெருங்கிய நட்பு ஏற்பட்டதினுல் பிரிடிஷ், அமெரிக்க தரைப்படை, விமானப் படைகளுக்கிடையே பூர்ணமான ஒத்துழைப்பு ஏற்பட்டது. எல்லாம் தயாராக இருந்தபொழுது மாண்ட்காமரி சேனைகளுக்கு ஒரு செய்தி அனுப்பினுன். இதை ராணுவ சரித்திரமெழுதுவோர்கள் நன்கு ஞாபகம் வைத்துக்கொள்வார்கள். "இப்பொழுது 21-வது சேனையின் பகுதிப்படைகள் ரைன் நதியைத்தாண்டும்" என்பதுதான். சில மணிகளுக்குள், அந்தப் பகுதியிலுள்ள பிரிடிஷ், கனுடிய, அமெரிக்கப்படைகள் ரைன் நதியைத்தாண்டிவிட்டன. ஜெர்மனியின் தற்காப்பு திட்டங்கள் முறியடிக்கப்பட்டன.

அதற்கு தெற்கில், காப்ளன்ஸுக்கு வடக்கிலும் தெற்கிலும் ஜெனரல், ஹாட்ஜஸ், ஜெனரல் பாட்டனிடம் உள்ள தீரமுள்ள அமெரிக்கப்படைகள் ஜெர்மன் படை வரிசைகளை ஊடுருவிச்சென்று ஜெர்மனிக்குள் முன்னேறின. துரிமதாகச் செல்லுவதில் பெயர் பெற்ற பாட்டன் வேகமாக தெனகிழக்குக்குச் சென்று டார்ம்ஸ்டாட், பிராங்க்பர்ட், ஆஷர்பன்பர்க்கைப் பிடித்தான்.

ரெமேசன் முன்னேறும் வாசலிலிருந்து முன்னேறிய ஹாட்ஜஸ் மேற்கிலும் வடமேற்கிலும் சென்று ரூர்நதி பிரதேசத்தை தெற்கிலிருந்து தாண்டிச் செல்லுவதுபோல் பயமுறுத்தினுன். ஸிம்ப்ஸனிடமுள்ள அமெரிக்க 9-வது சேனையும் மாண்ட்காமரியும் வடக்கிலிருந்து அதைச்சுற்றிவளைத்தார்கள்.

அதற்குக் கொஞ்ச தூரத்தில் பாட்சிடமுள்ள 7-வது அமெரிக்க சேனை ரைன் நதியைத் தாண்டி கருங்காடைச்சுற்றி வளைத்துவிட்டது. இவ்விதமாக அநேக பகுதிகளாகப் பிளக்கப்பட்ட ஜெர்மன் தற்காப்புகள் ஒன்றுபட்டு எதிர்த்துப் போராடமுடியவில்லை.

மேற்குப் போர்முனையிலுள்ள நேசதேசப்படைகள் எவ்வளவு வேகமாகவும் எவ்வளவு தூரமும் செல்லுவார்களென்று சொல்லுவதற்கில்லை. ரைன் நதியை ஒட்டியுள்ள எல்லா மேற்கு ஜெர்மனியும் அபாயத்துக்குட்பட்டுவிட்டது. இதே சமயத்தில் ருஷ்யர்களும் கிழக்கு ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் அபாயத்தை உண்டுபண்ணுகிருர்கள்.

பவேரியாவிலும் வடக்கு ஆஸ்திரியாவிலும் உள்ள மலைகளில் நின்று வெகுகாலம் சமாளித்து நிற்பது என்ற ஹிட்லரின் திட்டத்துக்கும் அபாயம் நேரிட்டுவிட்டது. ரைன் நதிக்கானப் போர் ஜெர்மனிக்கான போராக மாறிவிட்டது. நாஸி ஜெர்மனி வீழ்ச்சி பெருவதற்காக ஆடிக்கொண்டிருக்கிறது.

திடீரென்று பலமான சப்தத்துடன் அது வீழ்ச்சிபெறுது அதன் எல்லைப்புற அரண்கள் பலஹீனமானவை என்று வெளியாகிவிட்டாலும் உள்நாட்டு தற்காப்புகளின் வலிமை இன்னும் புலப்படவில்லை. மேலும் ஜெர்மன் மக்களின் மனப்பான்மையும் இன்னும் விளங்கவில்லை.

நேசதேசத்தார்கள் இறக்கமற்ற உருதியுடன் போரை நடத்துவார்கள். ஈசன்ஹவரைப் போல மாண்ட்காமரியும் தோல்விபெற்ற எதிரியுடன் சகவாசம் செய்யக்கூடாதென்று தடை செய்திருக்கிறுன். ஜெர்மானியர்கள்தான் உயர்வான ஜாதியென்றும், பிறரை அடிமைப் படுத்தவும், கொலை செய்யவும், துன்புறுத்தவும் உரிமை பெற்றவர்கள் என்று அவர்கள் நீத்திக்கொண்டார்கள் என்பதை மறந்துவிடக்கூடாதென்று மாண்ட்காமரி ஸோல்ஜர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறுன். அவன் பின்கண்ட உத்திரவை பிறப்பித்திருக்கிறுன். "சகவாசம் செய்யக்கூடாதென்பதில் பழிக்குப் பழிவாங்கக்கூடாதென்பதும் சேர்ந்துள்ளது. நாம உயர்வான ஜாதிக் கொள்கை உள்ளவர்களல்ல. ஆகிலும் குற்றமுள்ள தேசத்தை தண்டித்தால் மட்டும் போதாது. அந்த தேசம் குற்றச் செய்கையை உணரவேண்டும். அப்பொழுதுதான அதற்குக் கல்வி போதிப்பதற்கும் கண்யமுள்ள ஜனசமூகத்தில் அதைச் சேர்க்கும்படி செய்வதற்கும் ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம்."

மேற்கிலும், கிழக்கிலும் கிடைத்துவரும் நேசதேச வெற்றிகள் ஐரோப்பாவிலும் உலகம் பூராவிலும் ஆதிக்கம்பெற ஜெர்மானியர்கள் செய்த முயற்சியின்மூலம் அவர்கள் நாகரீகத்திலிருந்து பிரஷ்டர்களாகவும் ஏற்பாடான காட்டுமிராண்டித் தனத்தினுல் கைவிடப்பட்டவர்களாகவும் ஆகிவிட்டார்களென்று ஜெர்மன் மக்களுக்கு வற்புறுத்திச்சொல்ல முற்போக்கான நடவடிக்கைகளின் ஒரு அம்சம்.

நாஸித் தலைவர்களுக்குள் ஒற்றுமைக் குறைவு.

ஹெஸ்ஸியின் தூதுகோஷ்டி—அதற்கு அடையாளம்.

(W. N. யூயர்).

ஸ்டாக்கோமிலுள்ள பிரிடிஷ் அயல்நாட்டு காரியாலயம் மூலமாக சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க டாக்டர் ஹெஸ்ஸி செய்துவரும் முயற்சி ராஜீய முறையில் முக்கியத்துவமில்லாத போதிலும் உணர்ச்சி முறையில் மிகவும் முக்கியத்துவமுள்ளது.

அது உண்மை என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. யுத்தத்துக்கு முன் ஹெஸ்ஸி லண்டனிலுள்ள ஜெர்மன் அறிக்கை நிலயத்தின் தலைவராக இருந்தபொழுது அவர் மந்த புத்தியுள்ளவர், ஆகிலும் தீவிர புத்தியுள்ளவர். உத்தரவுகளை அமுலுக்குக் கொண்டுவருவதை விட வேறு ஒன்றும் செய்ய சக்தியற்றவர். இந்தத் தூதுகோஷ்டிக்கு அவரை ரிப்பன்டிராப் பார்த்துத்தான் பொருக்கியெடுத்திருக்கிறுர்.

ஹிட்லர் சமாதானம் செய்துகொள்ளத் தயார் என்றும், ஆனுல் ஜெர்மனி அதனுடைய பழைய எல்லைச்சரகங்களை அடையவேண்டுமென்றும், அவர் ஜெர்மனியின் நிர்வாகியாகயிருக்க வேண்டுமென்றும் ரிப்பன்டிராப் தூதர் மூலம் சொல்லியனுப்பியிருந்தால் அதிலிருந்து நாம் எவ்விதமான முடிவுக்கு வரவேண்டும்?

இந்தப் பிரயத்னம் நேசதேசத்தார்களுக்கிடையே விரோதத்தை உண்டுபண்ணும் உத்தேசமாகயிருக்கலாம். அல்லது அந்த ஷரத்துகளை பிரிடன் ஒப்புக்கொள்ளும் என்ற வாஸ்தவமான நம்பிக்கையாகயிருக்கலாம்.

எந்நிலைமையிலும் நாஸிகளின் தலைவர்களின் மனவுறுதி முற்றிலும் குலைந்துவிட்டது என்பதற்கு இது அத்தாக்ஷியாகும். ஏனெனில் நிலைமையை சமாளித்து நிற்கமுடியவில்லை என்றும், அவர்கள் வீண் எண்ணம் கொண்டிருக்கிறுர்கள் என்பதும் இதிலிருந்து வெளிப்படுகிறது. மூழ்கிக்கொண்டிருக்கும் நிர்வாகம் கற்பிதமான வைக்கோலைப் பிடித்துக்கொண்டு உயிரைக் காப்பாற்றிக்கொண்டுவிடலாமென்று நம்பியிருக்கிறது.

1945-ம் வருஷத்தில் ஹிட்லருக்கு எற்பட்டிருக்கும் நிலமையை 1814-ம் வருஷத்தில் நெப்போலியனுக்கு ஏற்பட்ட கதிக்கு ஒப்பிடலாம். சாம்ராஜ்யத்தை விட்டுவிட்டால் நேசதேசத்தார் அவனை பிரான்ஸில் மன்னராக இருந்துவரும்படி அனுமதிக்கத் தயாராக இருப்பார்கள் என்று நெப்போலியனும் நம்பினுன். பாரிஸை இழந்தாலும் ஆல்ப்ஸ் மலைகளில் நிலைத்து நிற்கலாமென்று அவனும் கனவு கண்டான். "சேனைகள் அதன் தலைவர்கள் சொல்படிதான் நடந்துவரும்" என்ற அறிவு ஏற்படும் வரையில் அவனும், ஜனங்களும், சேனையும் விசுவாசத்துடன் கீழ்படிந்து நடக்குமென்று எண்ணியிருந்தான்.

இத்தருணத்தில் சமாதானத்தைக் கோருவதென்பது நாஸித் தலைவர்கள் தன் நம்பிக்கையை இழந்துவிட்டார்களென்றும் உண்மையான நிலமையை அறியக்கூடவில்லை என்றும் ருஜுவாக்குகிறது. 1918-ம் வருஷத்திலிருந்த மூதாதையர்களைப்போல, போரை நடத்தலாமென்ற மாயைக்கும் தோல்வியால் ஏற்படக்கூடிய விளைவுகளிலிருந்து எவ்வித மேனும் தப்பித்துக்கொள்ளலாமென்ற மாயைக்கும் நடுவில் உழன்றுவருகிறார்கள்.

நாம் வெகு நாளாக எதிர்பார்த்துவந்ததற்கு டாக்டர் ஹெஸ்ஸியின் தூது அடையாளம் காட்டுகிறது. அதாவது நாஸித் தலைவர்களின் மன உறுதி நிலைகுலைய ஆரம்பித்ததுடன் வெகு தூரம் அதிகரித்தும் இருக்கிறது.

ஹிட்லரும் அதே தவறுகளைச் செய்தான்.

(விக்ஹாம் ஸ்டீட்).

(பி. பி. ஸி. பிரசங்கம்).

மகத்தான நிகழ்ச்சிகளும், மகத்தான தகவல்களும் ஏராளமாக வந்துசேர ஆரம்பமாகி விட்டன. எந்த சமயத்திலும் இன்னும் முக்கியமான தகவல்கள் வரக்கூடும். ரைன் நதிக் கரையிலிருந்து ஜப்பானியக் கடல் வரைக்கும், பால்டிக் கடற்கரையிலிருந்து பர்மாவிலுள்ள மாண்டலே வரைக்கும் எந்த நிகழ்ச்சியைப் பார்த்தாலும் அதில் நேசதேசத்தார்களுக்கு வெற்றியும் எதிரிகளுக்குத் தோல்வியும்தான் காணப்படுகின்றன. சம்பவங்கள் துரிதமாக நடைபெறுவதால் ஒரு இடத்தில் நாம் கவனம் செலுத்துமுன்னரே மற்றொன்று நம்முடைய திருஷ்டி கோசரத்தை மறைத்துவிடுகிறது. அதன் பயன் யாதெனில் நமக்கு ஒரு கதம்ப மான அபிப்பிராயங்களும் தோற்றங்களும் ஏற்படுகின்றன. நம்மை கலக்கிவிடக்கூடிய சரித்திர பூர்வமான அநேக எண்ணங்களும் உதயமாகுகின்றன. ஆகிலும் அவைகளில் நமக்கு ருசிகரமான உணவு கிடைக்கிறது. அந்த வாசனையைப் பின்பற்றி, சமாதானத்தை ஆவ லுடன் எதிர்பார்த்து நிற்கும் உலகத்தார்களுக்கு இதைவிட சிலாக்கியமான உணவு கிடைக் காதா என்று நிற்கிறார்கள். இவ்விதமாக அலங்காரமான சொற்களை நான் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஒரு வகைப்பட்ட உதாரணங்களைச்சொல்லுவதும் இப்பொழுதுயுக்தமானதல்ல.

உதாரணமாக சமீபத் தகவல்களை எடுத்துக் கொள்ளுவோம். அமெரிக்க 3-வது படை ஜெர்மனியில் பிராசீனமான நகரமான மெயின்ஸ் என்னும் ரைன் நதி நகரத்தைப் பிடித்தது. மெயின்ஸ் என்ற பெயர் ஒரு தொடர்ச்சியான எண்ணங்களை உண்டுபண்ணிற்று. 1495, 1521-ம் வருஷங்களில் நடைபெற்ற வோர்ம்ஸ் ஆலோசனை சபைகளையும் 1743-ம் வருஷத் தில் இங்கிலாந்து, ஆஸ்திரியா, ஸார்டினியா முதலிய நாடுகளுக்குள் பிரான்ஸுக்கு விரோத மாக நடைபெற்ற ஒப்பந்தத்தையும் அது ஞாபகப்படுத்தியது.

என்னுடைய கவனம் இப்பொழுது, வோர்ம்ஸில் நடைபெற்ற ஆலோசனை சபைகளில் நிலைபெற்றிருக்கிறது. ஏனென்றால் இந்த சபைகள் முதல் ஜெர்மன் ரெக்கின் சக்ரவர்த்தி யாலும் ஜெர்மன் தேசத்தின் புனிதமான ரோமன் சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாலும் கூட்டப்பட்டன. அச்சபைகள் தான் ஜெர்மனியினுடையவும், ஐரோப்பாவினுடையவும் சரித் திரத்திலேயே முக்கியமான கட்டத்திற்கு அடிகோலின. இன்று நமக்கு விந்தையாக இருந்தாலும், 14-வது, 15-வது நூற்றாண்டில் ஸ்விட்ஸர்லாந்துதான் ஐரோப்பாவில் வலு மிக்க, திறம் பொருந்திய ராணுவ வல்லரசாக இருந்தது. ஸ்விட்ஸர்லாந்து ஜனங்கள் புனிதமான ரோமன் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். ஆகிலும் அவர்கள் தங்கள் இஷ்டப் படியே ராஜ்ய பாரம் நடத்தி வந்தார்கள். ஸ்விட்ஸர்லாந்து ஜனங்களின் சுதந்திர தாகத்தை அறிந்தும் சாம்ராஜ்ய ஆக்ஷியில் அவர்களுக்கு ஒரு பங்கு கொடுத்தும் அவர்களின் விசுவாசத்தை சம்பாதிப்பதற்கு ஜெர்மன் ராஜ தந்திரிகள் சக்தி பெற்றிருக்கவில்லை.

மூன்றாவது ஜெர்மன் ரெக்கில் ஹிட்லரைப்போல, அப்பொழுதிருந்த ஜெர்மன் சக்ர வர்த்தியும் சிறிய நாடுகள் அடிபணிய வேண்டுமென்று நினைத்திருந்தார். இந்த மனப் பான்மை இல்லாவிடில் 1495-ல் வோர்மிஸில் நடைபெற்ற ஆலோசனை சபைக்கூட்டத்தில் ஐரோப்பாவின் சரித்திரம் மாறுதலேயடைந்திருக்கும். ஸ்விஸ் மக்கள் அறுவறுப்புடன் அவமதிக்கப்பட்டு சாம்ராஜ்ய சமஷ்டியின் அங்கத்தினர்கள் என்ற முறையில் வரி விகிதத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் அவர்களுக்கு அதில் யாதொரு விதமான பேச்சு உரிமையும் கிடையாதென்றும் சொல்லப்பட்டார்கள். ஆகையால் நான்கு வருடங்களுக்குப் பின் ஸ்விஸ்கள் சாம்ராஜ்யத் துருப்புகளை நையப்புடைத்து, உண்மையான சுதந்திரத்தைப் பெற்றார்கள்.

1521-ம் வருஷத்தில் நடைபெற்ற இரண்டாவது சபையும் முக்கியத்துவமுள்ளதுதான். இச்சபையை 19 வயதுள்ள பிளெமிங்க் வாலிபரான ஐந்தாம் சார்லஸ் சக்ரவர்த்தி ஜெர்மன்

சீர்திருத்தக்காரரான மார்டின்லூதரை சிக்ஷிப்பதற்காகக் கூட்டினார்கள். அவர் லூதரை வோர்ம்ஸுக்கு வரவழைத்து அவருடைய மத விரோதமான கட்டுரைகளை வாபஸ் பெறும்படி உத்தரவிட்டார். அவர் மறுத்துவிட்டார். மேலும் ஜெர்மனியிலுள்ள சீர்திருத்த ஸ்தாபனத்துக்கு ஜெர்மன் சக்ரவர்த்தி தலைமை வகிக்கவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார். வெகு காலம் கழித்து, ஐந்தாவது சார்லஸ் லூதரின் அழைப்புக்கிணங்காமல் சரித்திரத்திலேயே ஒரு மகத்தான சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார் என்று நெப்போலியன் சொன்னான். அதற்கு பர்த்தியாக, சார்லஸ் வோர்ம்ஸ் உத்தரவு ஒன்றை பிரப்பிவித்து, லூதரை தேச பிரஷ்டம் செய்து, ஜெர்மனியில் அநேக கக்ஷி பிரதி கக்ஷிகளைக் கிளப்பி விட்டான்.

அந்த சச்சரவின் ஆவேசம் உலகத்தில் இன்றும் இருந்துவருகிறது. ஹிட்லரின் அபிப்பிராயங்களுக்கு மூல புருஷரான ஹௌஸ்டன் ஸ்டீவர்ட் சேம்பர்லினின் கொள்கைகள் லூதர் புனிதமான ரோமன் சக்ரவர்த்தியுடனும் போப்பாண்டவருடனும் எதிர்த்துப் போராடினதை அடிப்படையாகக் கொண்டவை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நாஸித் தலைவர்கள் உருக் குலைந்துவிடுவார்களா?

பெர்கஸ்காடனில் ஸர்ஜன்களின் சுறுசுறுப்பு.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

ஹிட்லரை நாம் கைது செய்யும்பொழுது அவனுடைய உருவைக் கண்டு பிடிக்க முடியுமா? இந்த பிரச்னைதான் நேசதேச துப்பறியும் இலாகா முன்னும் லண்டனில் யுத்தக் கைதிகளைக் கண்டுபிடிக்க புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் சர்வதேச C. I. D. முன்னும் தோன்றியிருக்கிறது. பவேரியா மலைகளிலுள்ள நாஸிகளின் கடைசி தற்காப்பான "கொட்டர் டாமெரங்க் கொத்தளத்தை" யுத்தம் நெருங்கிவரும்பொழுது இந்த பிரச்னை அதிக முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

லண்டனுக்கு சமீப காலத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து ஜெர்மனியின் கியாதி பெற்ற ஸர்ஜன்கள் சென்ற சில வாரங்களில் பெர்கஸ்காடனுக்கு வரவழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. விசித்திரமாகத் தோன்றினாலும், பொறுப்புள்ள வட்டாரங்களில வெடிகுண்டுனு லேற்பட்ட காயங்களை சொஸ்தப்படுத்தும் வியாஜத்தின் மூலம் தன்னுடைய உருவை மாற்றிக் கொள்ள ஹிட்லர் சில நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறான் என்று விவாதம் நடைபெற்று வருகிறது. இது இவ்வளவு விசித்ரமா என்று கேட்கிறேன்.

எதிரிகள் கொள்ளைக் கூட்டத்தார்கள் என்றும், அமெரிக்காவில் கொள்ளைக் கூட்டத்தார்கள் ஆதிக்கம் பெற்றிருந்தபொழுது அவர்கள் ப்ளாஸ்டிக் ஸர்ஜனின் உதவியை பெரும்பாலும் நாடினார்களென்றும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். தழும்புகள் அகற்றப்பட்டன, விரலடையாளங்கள் மாற்றப்பட்டன. முக வித்தியாசம் உருக் குலைக்கப்பட்டது. அந்த மாறுதல்களுக்கு கொள்ளைக் கூட்டத்தார்கள் பொது ஜனங்கள் முன்வராமல் மறைமுகமாக வெகு காலம் இருந்துவரவேண்டும். கொள்ளைக் கூட்டத்தாருக்கு ஒளிகள் இருந்தாலும் அவரைப் போல் மற்றொருவர் இருந்தாலும் இது வெகு சுலபமானது. ஹிட்லருக்கு இரண்டு சௌகரியங்களும் இருக்கின்றன.

எந்நிலைமையிலும் ஹிட்லர் பேசும்பொழுதும், கோபம் மூண்டபொழுதும் தவிர மற்ற சமயங்களில் மந்தமான, பகட்டில்லாத சிறுவன்தான். அவனுடைய கண்களில் அதிகச்சேவை காணப்படாது. அவனுடைய உருவை மாற்றியமைப்பதில் யாதொரு சிரமமுமேற்படாது. தாடி வளர்க்க வேண்டும் அல்லது மழுங்க மொட்டை அடித்து விடவேண்டும். கண்ணாடி போட்டுக்கொள்ள வேண்டும். தலை மயிரை மற்றொரு விதமாக அலங்காரம் செய்துகொள்ள வேண்டும். அப்பொழுது கோட்டைக்குள் கட்டாய வேலைக்கு அனுப்பப்பட்ட ஆஸ்திரியர் என்று அவரை மதித்துவிடக்கூடும்.

உற்சாக மற்ற உபாத்தியாயரான ஹிம்லரும் சுலபமாக அவருடைய ஸ்வரூபத்தை மாற்றிக்கொள்ளலாம். ஆகிலும் கோயரிங்கின் பருமனையும் கோயபல்ஸின் ஜ்வலிக்கும் கண்களையும் தட்டையான பாதங்களையும் மறைமுகப்படுத்த முடியாது.

ஹிட்லர் தற்கொலை செய்துகொள்ளாத போனால், அவன் மலைகளிலுள்ள ஸ்பானிஷ் நகரத்தில் ஒரு இடத்தில் ஒழிந்துகொள்ளுவான் என்று லண்டனில் நம்பப்படுகிறது. அவனைப் போல் உருவமுள்ள அநேகர்கள் சிலகாலமாக நடுநிலைமை நாடுகளுக்குச் சென்று அங்கு வசித்துவருகிறார்கள். அவசியம் வரும்பொழுது அவர்கள் ஹிட்லருக்கு அந்த ஸ்தானங்களை விட்டு வருவார்கள்.

நாஸிகள் தப்பி ஓடுவதற்கும் சமீப காலத்தில் சௌகரியம் குறைந்துவிட்டது. ஜெர்மனிக்கு சலுகை காட்டி ஏராளமான பொருள்களை முதலீடு செய்திருக்கும் ஆர்ஜண்டினு ஜெர்மனியுடன் போர் தொடுத்துவிட்டது. யுத்தக் குற்றவாளிகளுக்கு தங்குமிடம் அளிப்பதாக உத்தேசமில்லையென்று ஸ்வீடன் சொல்லிவிட்டது. நிச்சயமாக அது நாஸித் தலைவர்களுக்கு இடம் கொடாது.

ஹிட்லரும் அவனுடைய சிநேகிதர்களும் நேசதேச முற்றுகையைத் தாண்டி ஜப்பானுக்குச் செல்லும் நீர்மூழ்கிகளில் ஜப்பானுக்குச் சென்று ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் வரையில் வாழ் நாளைக் கடத்திவரலாம். ஷ்னர் கல் அமைப்புகள் உள்ள அந்த நீர்மூழ்கிகள் ஜப்பானுக்குப் பத்திரமாகச் சென்றுவிடும். ஜெர்மனியில் பிதெயனும், லவாலும், மற்ற பிரெஞ்சு துரோகிகளும் வசித்து வந்ததுபோல் ஹிட்லரும், ஹிம்லரும், ரிப்பன்டிராப்பும், மற்ற அந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்களும் ஜப்பானின் விருந்தாளிகளாக அங்கு இளப்பமான வாழ்க்கையை நடத்திவரக்கூடும்.

ஜெர்மன் படைகளை இழுக்கும் காந்தம்.

ரேமேசனில் நதியைத் தாண்டியதின் உபயோகம்.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் பிரௌன்ரிக்).

என்னுடைய அபிப்பிராயப்படி ஜெனரல் ஈசன்ஹவரின் யுத்த தந்திரத்தில் ரெமேசன் அமைந்திருந்த நிலைமை மிகவும் மிகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவதாக, ரெமேசனில் பாலம் உடைபடாமல் அப்படியேயிருக்குமென்று அவன் திட்டம் போடவில்லை. ஏனென்ருல் உபயோகமுள்ள வகையில் அதை அவர் கைப்பற்றியதென்பது ஒரு அதிருஷ்டம். இந்த அதிருஷ்டத்தை ஒருவரும் எதிர்பார்த்திருக்கமுடியாது.

அமெரிக்க 1-வது சேனையின் முன் அணிப்படைகள் பாலம் உடைபடாமலிருப்பதைக் கண்டவுடன் அவர்கள் அதை உபயோகிப்பதற்காக அதைக் கைப்பற்றினர்கள். அந்தப் பாலத்தை அழிக்க நியமிக்கப்பட்டிருந்த ஆபீஸர்கள் தங்களுடைய வேலையைச் செய்யாததற்காக அவர்களை ஜெர்மானியர்கள் சுட்டுச் கொன்ருர்களென்று சொல்லப்படுகிறது.

உபயோகமுள்ளதாக இருந்த போதிலும் இந்த அதிருஷ்டத்தைக் கண்டு ஈசன்ஹவர் அவருடைய திட்டங்களைத் திருத்தி அமைக்கவில்லை. போரில் வெற்றி பெறவேண்டுமானல் எங்கு போரை நடத்தவேண்டுமென்று முடிவு செய்துகொள்ளவேண்டும், அதன் பின் எதிரியை அங்கு போர் செய்யும்படி கட்டாயப்படுத்தவேண்டும் என்று பீல்ட்மார்ஷல் மாண்ட்காமரி சில காலத்துக்கு முன் என்னிடம் சொல்லியிருக்கிருர். கேயனில் பிரிடிஷ், கனடியப் படைகளைத் தாக்கும்படி செய்து ரூண்ட்ஸ்டெட்டையும் ரோமலையும் படைகளை பலி கொடுக்கும்படி செய்தது இதற்கு உதாரணமாகும். எதிரி எவ்வித நடவடிக்கையை மேற்கொண்டாலும் ஒருவர் அவருடைய திட்டங்களை மாற்றி அமைக்கக் கூடாதென்பது எவ்வளவு முக்கியமோ, அது போல நமது படைகளும் எதிர் பாராதபடி ஒரு லாபத்தைப் பெற்ருல் அதற்காகவும் திட்டத்தை மாற்றக் கூடாதென்பதும் முக்கியமானது தான். போர் முனையைப் பற்றிய தேசபடத்தைப் பார்த்தால் ரெமேசனுக்கு எதிர்த்தார்ப்போல் ரைன் நதியின் மேற்குக்கரை 21-வது சேனையிருக்கும் எமரிக், ரூர் பிரதேசத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தைப் போல் கவசம் பூண்ட படைகளின் போருக்கு லாயக்கில்லாதது. ரைன் நதியின் கிழக்குக் கரையில் சுலபமாகச் செல்லக் கூடிய இடங்களுக்கு ரைன் நதியைத் தாண்ட படைகளை வைத்துக்கொள்ளாமல் ரெமேசன் பாலமுனைக்குப் படைகளை அனுப்புவது புத்திசாலித்தனமா?

ராணுவ திட்டங்கள் அசைந்து கொடுக்கக் கூடியதாக இருக்கக் கூடாதென்று நான் சொல்லவில்லை. நல்ல திட்டமென்பது அசைந்து கொடுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். ஆனல் முக்கியமான லக்ஷியத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது.

ரெமேசனில் ரைன் நதியைத் தாண்டியதின் உண்மையான பிரயோஜனம் யாதெனில், ஜெனரல் ஈசன்ஹவர் எதிர்பாராதபடி நடத்தி அந்த இடத்தில் பலமாகத் தாக்கினல் ஜெர்மானியர்கள் அதையும் அலக்ஷியம் செய்யத் துணியமாட்டார்கள் என்பது தான்.

ஆகையால் எதிரியின் மர்ம ஸ்தானத்திற்குப் போகக்கூடிய இடங்களுக்குப் போக நதியைத் தாண்டக் கூடிய இடங்களில் வழியை மறிப்பதில் பயன்பட உபயோகிக்கக் கூடிய படைகளை இங்கு முதல் அமெரிக்க சேனை காந்தம் போல இழுத்துவிடுகிறது.

ரெமேசனுக்குத் தெற்கில் ஜெனரல்கள் பாச்சும், பாடனும் ரைன் நதிக்கு மேற்கிலுள்ள ஜெர்மனியின் கடைசி முன்னணி தளத்திலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்தியடித்து வருகிருர்களென்பது முதலெடுப்பில் ஆச்சரியமாக இருக்கலாம். அதற்கு இரண்டு முக்கிய

காரணங்களுண்டு. முதலாவதாக, ஸார் நதி பிரதேசம் தான் ஜெர்மனிக்கு பாக்கியாக உள்ள பெரிய தொழிற்சாலை இடம். இரண்டாவதாக, தற்காப்பு சௌகரியம் இருந்து வருகிறது. மோஸலுக்கு வடக்கில் ஸிக்பிரட் அரண் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. 7-வது சேனையிருக்குமிடத்திற்குத் தெற்குப் பக்கத்தில் ஸிக்பிரட் அரண்கள் ரைன் நதியின் கிழக்குக் கரை ஓரமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனல் ரைன்நதியிலிருந்து லக்ஸம்பர்க் வரையிலுள்ள மாகிேைந, ஸீக்பிரட் அரண்கள் தெற்கிலிருந்து ஜெனரல் பாட்ச் முன்னேறுவதைத் தடுக்க நன்ருக அமைக்கப்பட்டிருக்கின்றன. மோஸலை பீரங்கிகளால் நொருக்க ஜெனரல்பாடன் செய்த முயற்சியின் முக்கியத்வம் இதனல் தான் ஏற்பட்டது. இப்பொழுது ஸிக்பிரட் அரண் தற்காப்புகள் ஜெனரல் பாட்சுக்கு திறக்கப்பட்டுவிட்டன.

எதிர்பாராமல் கிடைத்த அதிருஷ்டத்தை சரியானபடி பயன்படுத்திக்கொள்ளாவிட்டால் அதிலிருந்து கெடுதல் ஏற்படும். ரைன்நதியை ரெமேசனில் தாண்டிய பின் சுறுசுறுப்புக் குறைந்துவிட்டது. யுத்தத்தில் நதிகள் முக்கியமான இடையூறுகளாக இல்லாவிட்டாலும் அவைகள் காலதாமதம் செய்தவதற்குப் போதுமானவைகளாகயிருந்திருக்கின்றன. ஜெனரல் ஹாட்ஜஸ் ஜெர்மனிக்குள் அதிகமாக முன்னேறவில்லையென்று நாம் தாபப்பட்டாலும், ஒடர் நதியின் கிழக்குக் கரையில் பிராங்பர்ட்டுக்கும் குயஸ்டிரினுக்கும் மத்தியில் வெகு காலமாக நிலை பெற்றிருக்கும் மார்ஷல் ஸூகோவைப் பற்றி ருஷ்யர்கள் என்ன நினைப்பார்கள்.

ஆனல் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் அவசரப்படுவதற்கும் வேகத்துக்கும் சமத்வம் ஏற்படுத்திவிடுவார்கள். நமது விமானிகளுக்கு அதிக அவகாசம் கொடுக்கப்பட்டால், அவர்களின் நடவடிக்கை மூலம் எதிரிக்கு பலத்த நஷ்டம் ஏற்படும். ஜெர்மனி பூராவையும் ஆக்கிரமிப்பதில் நமக்கும் உயிர்ச்சேதம் குறைவுபடும்.

ஜெர்மனியை நடத்தவேண்டிய சரியான முறை.

J. L. கார்வின்.

(டெயிலி டெலகிராப்).

20-வது நூற்ருண்டின் ஆரம்பத்தில் ஜெர்மானியர்கள் மற்ற எல்லோரையும்விட, ஆயுத பலம், கலைஞானம், விஞ்ஞான சாஸ்திரம், உற்பத்தி, சகல விதமான தொழிற் பயிற்சி முதலியவற்றில் உயர்வானவர்களென்று எண்ணியிருந்தார்கள்.

அவர்களின் தொழிற்சாலை நகரங்களும் பட்டணங்களும் அமெரிக்காவைப்போல் அபிவிருத்தியடையவில்லையா? உலகத்திலுள்ள ஒவ்வொரு வியாபார ஸ்தலத்திலும் அவர்கள் முன்னணியில் நிற்கவில்லையா? அவர்கள் வியாபாரக் கப்பல்களையும் யுத்தக் கப்பல்களையும் கட்டவில்லையா? அவர்கள் ராணுவ, கடலாதிக்கம் பெற ஏன் ஆசைப்படக்கூடாது? மத்திய ஐரோப்பாவிலிருந்து மத்திய கிழக்கு வரையிலும் சாம்ராஜ்யத்தை அடையவும் அல்லது ஆக்ஷிபுரியவும் ஜெர்மனி ஏன் ஆசைப்படக்கூடாது? கடல் தாண்டி குடியேற்ற நாடுகளையும் சம்பாதிக்க ஏன் ஆவல் கொள்ளக்கூடாது? கிழக்கில் ருஷ்யாவையும் பிரிடனைக் கடலிலும் முறியடிக்க அது ஏன் ஆசைப்படக்கூடாது?

ஸெப்ளின் விமானங்களால் ஆகாய ஆதிக்கம் பெறுவதென்று அவர்கள் உற்சாகத்துடனிருந்தார்கள். 30-வருஷ யுத்தம் நடைபெற்றதால் அவர்கள் உலகில் காலம்கிரமித்து தலை தூக்க ஆரம்பித்தார்கள். அதனல் ஜெர்மனி எந்த விஷயத்திலும் இரண்டாவது ஸ்தானம் வகிக்க வேண்டுமென்று ஏற்படுகிறதா?

யாதொரு கியாதியுமில்லாத ஒரு வாலிப ஆஸ்திரியரான ஹிட்லர் மனதில் வியன்ஞவிலுள்ள மற்ற சக்திகளுடன் இந்தத் தோற்றங்களும் புலப்பட்டன. அவனுக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டது. அவனுடைய ஜாதிதான் அவனுக்கு தெய்வம்.

அபிப்பிராயங்களும் கனவுகளும் எவ்விதமிருப்பினும் சக்தியுள்ள ஒவ்வொரு ஜெர்மன் ஆடவரும் ராணுவ யந்திரத்தின் பயிற்சி பெற்ற போர் வீரன் என்பதை மறந்துவிடக்கூடாது.

மேலே சொல்லிய விவரணம் பரிகாச உக்தியல்ல. பரிகாசமாகக் குறை கூறுகிறவர்கள் முதல் உலக யுத்தத்துக்கு "ஜெர்மனியின் அகம்பாவம்தான்" காரணமென்று சொல்லுவார்கள். இரண்டாவது உலக இசுவுக்கும் அதுதான் காரணம். எதிரியை நிராயுதபாணியாகச் செய்வது பூராவாக இருப்பதுடன் சாச்வதமாகயிருக்கவேண்டும் என்ற படிப்பினையை நாம் அறியாவிட்டால் மூன்ருவது யுத்தமும் மூளும். ஜெர்மன் ராணுவ அமுலும் பயித்தியமும் இணைபிரியாதவை.

இப்பொழுது சென்ற போரின் போக்கை நாம் மதிக்காமல் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். பூர்ணமான வெற்றிக்குப்பின் பலஹீனமான ராணுவ நிகழ்ச்சியையும் சமாதான அமைப்புக் குறைவையும் பற்றித்தான் நாம் கவலைப்படுகிறோம்.

நேசதேசப் படைகள் பெர்லினுக்குச் சென்றிருக்கவேண்டும். இன்னும் 6 மாதங்களில் செய்யவேண்டிய தியாகங்கள் கடுமையாக இருக்கும். பலமான தோல்வியின் ருஜுவை ஜெர்மன் மக்கள் உணரும்படி செய்யவேண்டும். அதற்கு பதிலாக மேற்கிலிருந்த படைகள் பிரான்ஸிலிருந்தும் பெல்ஜியத்திலிருந்தும் படை வரிசை குலையாமலும் வாத்திய கோஷத்துடனும் த்வஜங்களுடனும் பின்வாங்கும்படி விட்டு விட்டோம்.

ஆகையால் ஜெர்மனியின் ஸ்வய மதிப்பு தோல்வியினின்றும் உயிர் பிழைத்து ஓங்கி விட்டது. நாஸிகளுக்கு முன்னிருந்த மிதமான புத்தியுள்ள சரித்திரக்காரர்கள் இருபது மடங்கு அதிகமான படைகளுடன் நான்கு வருஷத்துக்கு மேல் ஜெர்மன் சேனை சமாளித்து நின்றதென்பது அதனுடைய மற்றெல்லாப் புகழ்களையும்விட அதிகமானதென்று சொன்னார்கள்.

இது மட்டும் போரில் உண்மையாக ஈடுபட்டிருப்பவர்களைப்பற்றிக் கட்டுக்கதையாகச் சொல்லும் முறை. இத்துடன் ஹிட்லர் மற்றொரு அபாண்டமான பொய்யையும் சேர்த்துக் கொண்டான். போர் முனைகளில் ஜெர்மனி முறியடிக்கப்படவில்லை, உள்நாட்டிலுள்ள ராஜீய துரோகத்தினால் வெற்றிகளின் பலன்கள் கிட்டாமல் போய்விட்டதென்று ஹிட்லர் சொன்னான்.

ஜெர்மனியின் ஜாதி அசம்பாவம் வெறி பிடித்த ஆத்ம ஆராதனையாக மாறிவிட்டது. ஜெர்மானியர்கள் தோற்கடிக்க முடியாதவர்கள், அபிவிருத்தியடையவும் ஆக்ஷி புரியவும் வரையற்ற பாத்தியமுள்ளவர்கள் என்ற மாயை நிர்வாகத்தின் ஒரு கொள்கையாக மாறி விட்டது.

நாஸிகளின் ராணுவ முறையும் வெறியும் உச்ச நிலைமையை அடைந்து பூமியை ஆளும்படி செய்தது. ஆகிலும் ஒப்பிட முடியாத அதோகதியை அடையும் ஸ்திதியை அடைந்து விட்டது. ஒரு தேசம் பூராவிலுமுள்ள ஜனங்களின் கெட்ட புத்திக்குக் காரணமானவைகளைச் சொல்லிவிட்டேன். ஜெர்மன் வியாதிக்கு மருந்து இல்லையா? அது சொஸ்தமாகாதா? சரியான சிகிச்சை செய்தால் அதை சொஸ்தம் செய்து விடலாம். அந்த வியாதியை குணப்படுத்துவது நேசதேசத்தார்கள் கையிலிருக்கிறது. அதன் முதலாவதான, அத்தியாவசியமான கட்டமானது, நடைமுறையில் உபயோகமுள்ளதாகவும், சிரமசாத்தியமானதாகவும் நீடித்ததாகவுமிருக்கும்.

நேசதேசத்தார்கள் நபும்ஸகர்களாகச் செய்துவரும் அக்கிரமப் போரை நடத்தியவர்களின் ஆத்ம குணம் வேதாந்தத்தினாலல்லாமல் உலக விவகாரங்களினால் பேத புத்தியை அடைந்துவிட்டது. அவர்களுக்கு 50 வருஷங்களாகக் கிடைத்த அதிருஷ்டத்திலிருந்து தலை கொழுத்துவிட்டது. பிஸ்மார்க்கின் புத்தி கூர்மையினால் ஏற்பட்ட அபாரமான வெற்றிகளைக் கண்டு அவர்களுக்குக் குடி வெறி உண்டாகிவிட்டது. இந்தக் குடி வெறியிலிருந்தும் புத்திபிரமத்திலிருந்தும் அவர்களை ஸ்வய நினவுக்குக் கொண்டுவரவேண்டும்.

ஜெர்மன் மக்களின் ஆத்மிய குணத்தையும் புத்தி விசாலத்தையும் அபிவிருத்தி செய்யக் கல்வி போதிக்கவேண்டுமென்று அநேக வதந்திகளிருந்து வருகின்றன. மற்ற எந்த விதமான கல்விக்கும் ஜெர்மானியர்களை ஜெர்மனியிலேயே நன்றாக முறியடிப்பதுதான் முக்கியமான நிபந்தனையாகும்.

சென்ற யுத்தத்திலில்லாதபடி இப்பொழுது பலமான வைத்தியம் ஆரம்பமாகிவிட்டது. உயர்வு என்ற கனவு மறைந்துவிட்டது. அக்கிரமப்போரை நடத்தியவர்கள் தூளாக்கப்படுகிறார்கள். முப்பது வருஷ யுத்தத்துக்குப் பின் அவர்களுக்கு இப்பொழுது பலமான நாசம் ஏற்பட்டுவிட்டது.

அடுத்தபடியாக நமக்கு வெற்றி பூர்ணமாகக் கிடைத்தபின் நேசதேசத்தார்கள் ஜெர்மனி பூராவையும் ஆக்கிரமித்து விடுவார்கள். அதன் பிறகு யால்டா மகாநாட்டின் முடிவின் பிரகாரம் ராணுவ, தொழிற்சாலைகளில்லாமல் செய்யும் திட்டமும் ஜெர்மன் நிர்வாகத்தை அழிப்பதும் கையாளப்படும்.

மறு முறை ஜெர்மானியர்கள் முன்னிருந்த மனப்பான்மையுடன் யுத்தத்தையும் ராணுவ அதிகாரத்தையும் நோக்கக்கூடாது. பிரஷ்ய ஐதீகப்படி நடைபெற்ற யுத்தங்கள் பயன்படவில்லை. மேலும் லாபம் கிடைப்பதற்கு பதிலாக சிக்ஷை ஏற்படும் அபாயமும் உண்டாகி விட்டது.

சென்ற போரின் படிப்பினை இதுதான். எதிரி அப்பொழுது அதை ஒப்புக்கொள்ளவில்லை. அதை ஒப்புக்கொள்ளும்படியாக நாம் இப்பொழுது அவர்களை கட்டாயப்படுத்தி விடுவோம்.

ஜெர்மனியை எல்லா காலநிலையிலும் தாக்குவது.

காலநிலையை கவனித்துச் சொல்லும் விமானங்களின் நடவடிக்கை.

(விங் கமாண்டர் L. V. பிரேசர்).

ஒரு மாதத்திற்கு மேலாக ஒவ்வொரு இரவிலும் பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த மஸ்கிடோ விமானங்கள் 4,000 ராத்தல் கனமான வெடிகுண்டுகளை பெர்லினின் தொழிற் சாலை, போக்குவரத்து மார்க்கங்கள் பேரில் வீசியிருக்கின்றன. அவைகள் பிரிடனிலிருந்து மூடுபனி, பனிக்கட்டி, கனமான மேகங்கள், சில சமயங்களில் கடுங்குளிர் மூலமாகச் சென்றிருக்கின்றன. மூன்று வருஷங்களுக்கு முன் இவ்விதமான நடவடிக்கைகள் அசாத்திய மாக இருந்திருக்கும்.

ஜெர்மனியில் பிரிடிஷ் விமானப்படை தாக்குவதில் ஒரு அம்சமான நடவடிக்கையில் 22 இரவுகளில் 1940-ம் வருஷம் பூராவிலும் லண்டன் பிரதேசத்தில் ஜெர்மன் விமானப் படை நடமாடியதைவிட அதிகமான தடவை நடமாடியிருக்கின்றன.

இத்துடன் நேசதேச விமானப்படையைச் சேர்ந்த கனமான வெடிவிமானங்கள் பகல் இரவாக எல்லா கால நிலைமையிலும் ஏராளமான வெடி குண்டுகளை வீசியிருக்கின்றன. அதை யும் சேர்த்துக்கொண்டால் ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்தி எவ்விதம் பாதிக்கப் படுகிறது என்பதைப் பற்றிய அறிவு நமக்கு ஏற்படக்கூடும்.

பிப்ரவரி மாதத்திய காலநிலை அடிக்கடி மாறக்கூடியது. மேற்கிலும் மத்தியதரைப் பிரதேசத்திலும் இருக்கும். பிரிடிஷ், அமெரிக்க வெடி விமானங்கள் ஜெர்மனி பேரில் அந்த மாதத்தில் 1,35,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக் கின்றன. இந்த இரண்டாவது உலக யுத்தத்தில் எந்த மாதத்திலும் இவ்விதமான அளவிற்கு குண்டுகள் வீசப்பட்டதில்லை.

அசௌகரியமான காலத்தில் ஏராளமான விமானங்கள் நஷ்டமாகாமல் உயிர்ச்சேத மும் குறைவாக இருந்திருக்கிறது. 53,000 தடவை ஐரோப்பாவிலுள்ள நேசதேச ஸ்ட்ராடஜிக் விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டதில் ஒரு சதவிகிதத்துக்குக் குறைவாகத்தான் விமான நஷ்டம் ஏற்பட்டது.

இந்தக் குறைவான நஷ்டம் ஒரு வருஷத்திற்குமுன் ஏற்பட்டிருக்க முடியாது. அந்த சமயத்தில் பிரிடிஷ் பாம்பர் படையும், அமெரிக்க விமானப்படையும் தற்பொழுதுள்ள அடிக்கும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை, அல்லது 1945-ம் வருஷத்தில் அசௌகரியமான காலநிலையிலும் பூர்த்தியாகியிருக்கும், வரிசையாக நகரங்களைத் தாக்கும் கொள்கையையும் பரிஷ்காரம் செய்துவிடவில்லை.

இந்த அரிய சேவைகளுக்குரிய கியாதி வெடி விமானத் தாக்குதல் வெற்றிக்கும், இகழ்ச்சிக்கும் நம்பியிருக்கும் ஒரு கியாதி பெறாத ஸ்தாபனத்துக்கு உரித்ததாகும். நேச தேச விமானப்படையைச் சேர்ந்ததும் காலநிலையை அனுமானிக்கக்கூடியவர்களுமான பிரிடிஷ், அமெரிக்க விமானிகளைப் பொருத்துத்தான் விமானங்கள் புறப்படுவதற்கான காலத்தை நிர்த்தாரணம் செய்யத் தகவல் சில மணிகளில் தொகுக்கப்படுகின்றன. அந்தத் தகவல்களிலிருந்துதான் விமானிகள் தாக்கவேண்டிய லக்ஷியங்கள் உள்ள இடத்திலும் விமானங்கள் செல்லும் மார்க்கங்களிலும் உள்ள கால நிலையை முன் கூட்டி ஊகித்துக் கொள்ளலாம்.

பிரிடிஷ், அமெரிக்க விமானப் படையிலுள்ள விமானிகளுடையவும் நாவிகேடர்களுடைய வும் முடிவைப் பொறுத்துத்தான் தாக்குதலின் பிரயோஜனம் காணப்படும். பொறுப்பு அத்துடன் நின்று விடவில்லை. அவர்களின் தகவல்களின் பேரில் காலநிலையை மதிக்கும் நிபுணர்கள் இறுதியான முடிவுகளைச் செய்து விடுகிறார்கள். அந்தத் தகவல்களைப் பொறுத் துத்தான் வெடி விமானங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான வேலைக்காரர்களின் உயிர்கள் காப்பாற்றப்படும்.

1941-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் காலநிலையை நிர்த்தாரணம் செய்வதற்காக பிரிடிஷ் விமானங்கள் சென்றன. சமீப காலம் வரையில் அது அமெரிக்க 8-வது படைக்கும் கால நிலைமையைப்பற்றிய தகவல்களைக் கொடுத்துவந்தது. இப்பொழுது பிரிடிஷ் விமானப் படையைப்போல அமெரிக்க விமானப்படையிலும் கால நிலையை அறியும் விமானிகள் இருந்து வருகிறார்கள். அந்தப் படை அமைக்கப்படுமுன் அமெரிக்க விமானிகளும் நாவி கேடர்களும் பிரிடிஷ் கமாண்டைச் சேர்ந்த படைகளுடன் சென்று இந்த விசேஷமான அலுவலில் அனுபவம் பெற்று வந்தன.

உலகத்தில் மிகவும் வேகம் பொருந்திய பிரிடிஷ் மஸ்கிடோ விமானம் இந்த வேலைக்கு முற்றும் தகுதியானது. அடுத்துவரும் வெடிவிமானங்களுக்கும் அதன் படைகளுக்கும்

அது முன் கூடியே மேக சஞ்சாரம், காற்றின் வேகம், காற்றடிக்கும் திசைகள் முதலியவற்றைக் குறித்துத் தயார்செய்து கொடுக்கவேண்டும். இந்த வேலை துரிதமாக நடத்தப்படவேண்டும். சரியாகவும் இருக்கவேண்டும். விமானிகளும் நாவிகேடர்களும் திரும்பி வரும்பொழுது ரிபோர்ட்டுகளைத் தயார்செய்து, விமானத் தளத்தில் இறங்கியவுடன் அதை சமர்ப்பிக்கத் தயாராக இருக்கவேண்டும்.

வெடி விமானப்படை புறப்படுவதற்குச் சற்று முன்னதாக காலநிலையை நிர்ணயம் செய்யும் மஸ்கிடோ விமானங்கள் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்துவிடும். சில சமயங்களில் நடவடிக்கை ஆரம்பிப்பதற்குச் சற்று முன்னதாக அவைகள் வந்த காலமுமுண்டு. காலம் கழித்து வந்த ரிபோர்ட்டுகளின் பேரில் ஜெர்மனிக்குச் சென்று கொண்டிருக்கும் விமானங்களும்கூட திருப்பி அழைக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு விமானி வந்தவுடன் டெலிபோன் மூலமாக அவன் அவனுடைய தகவல்களை பிரிடிஷ் பாம்பர் கமாண்ட் தலைமை காரியாலயத்திற்கும் கமாண்டின் மற்றப் பகுதிகளுக்கும் தெரிவிப்பான். இந்தத் தகவலின் பேரில் ஒரு குறிப்பிட்ட லக்ஷியத்தைத் தாக்குவது சாத்தியமாவென்று கால நிலை நிர்ணயம் செய்யும் ஆபீஸர்கள் முடிவு செய்வார்கள். மேலும் எவ்விதமான சுளுந்துகளை உபயோகிப்பதென்றும் அவர்கள் முடிவு செய்வார்கள்.

உதாரணமாக, பெர்லினுக்குச் சமீபத்தில் மேக சஞ்சாரமிருக்கிறதென்று அவர்கள் கண்டுபிடித்திருக்கலாம். மேகத்தின் சலனத்தின் வேகமும் போகும் திசையும் சமீபத்தில் சென்று அறியும் வரையில் லக்ஷியத்தைத் துலக்கிக் காட்டும் விமானங்கள் எவ்விதமான சுளுந்துகளை உபயோகிப்பதென்பதை நிர்ணயிக்க முடியாது.

காலநிலையைக் கண்டுபிடிக்கச் செல்லும் விமானிகள் உற்று நோக்குகிறவைகளைப் பற்றிக் குறிப்புகள் எழுதி வருவதுடன் ஒளிப்படங்களும் எடுத்து வருவார்கள். அவைகள் எவ்விதமான காலநிலையிலும் ரோந்து செய்யும் சண்டை விமானங்களையும் ஏமாற்றிவிட்டுச் செல்லவேண்டும்.

எதிரியின் பிரதேசத்திலுள்ள காலநிலையும் பிரிடிஷ் தளங்களிலுள்ள காலநிலைமையும் அவர்களைத் தடை செய்ய முடியாது. பிரிடிஷ் பாம்பர் கமாண்டின் தலைமை காரியாலயத்தில் உள்ள ரகசியமான அறையில் பிரிடனிலுள்ள ஒவ்வொரு விமானத் தளத்தையும் காட்டும் ஒரு பெரிய தேச படம் இருக்கிறது.

சௌகரியமான காலநிலையில் ஒவ்வொன்றும் ஒரு சிறிய பச்சை விளக்கின் மூலம் அடையாளம் செய்யப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் இந்த விளக்குகள் அங்குமிங்கும் அணைந்துவிடும். ஒரு சமயத்தில் பூராப் படமும் இருட்டடைந்து விட்டது. விமான தளங்கள் நடமாட்டத்துக்கு லாயக்கில்லாமலிருந்தன என்று பொருள்படும்.

ஆகிலும் ஒரு தளத்தில் மஸ்கிடோ விமானங்கள் வருவதும் போவதுமாகக் காணப்பட்டது. காலநிலைமையை அறியும் விமானங்கள் கடுங்குளிரிலும் தங்களுடைய வேலையைச் செய்து வந்தன.

இந்த விசேஷப் பயிற்சி பெற்ற விமானிகளுக்கு அநேக ஜனங்களைவிட காலநிலைமையைப் பற்றி அதிகத் தகவல்கள் தெரியும். அவர்கள் அதை அறிவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். அவர்களுடைய சாமர்த்தியத்தையும் தைரியத்தையும் பொறுத்துத்தான் ஜெர்மனியைத் தாக்கிவரும் விமான நடவடிக்கைகள் பகலிலும், இரவிலும் வெற்றிகரமாக நடைபெறுகின்றன.

சர்ப்பராக்களைத் தானகவே ஸப்ளை செய்துகொள்ளும் கடற்படை.

பஸிபிக் கடற்படையின் ஆயத்தங்கள்.

கிராஹாம் ஸ்டான்போர்ட்.

(குவாமிலுள்ள டெயிலி மெயில் பத்திரிகையின் நிருபர்.)

பிரிடிஷ் கடற்படை தனக்கு வேண்டிய சர்ப்பராக்களைத்தானே ஸப்ளை செய்து கொள்ளவும் வெகு காலம் கடலிலேயே சஞ்சாரம் செய்துவரவும் தயாராக இருக்கிறது. அந்த கடற்படைக்கு எண்ணெய்யும், உணவுப் பொருள்களும், வெடி மருந்துகளும், உதவிப் படைகளும், விமானப் படையும் மைல்கள் கணக்கான நீளமாக நிற்கும் 20 சாமான் கப்பல்கள் கொண்ட ஒரு மிதக்கும் கடற்படை தளத்தின் மூலம் ஸப்ளை செய்யப்படும்.

உலகத்திலேயே மிகப் பெரியதான இந்த சாமன் கப்பல் கூட்டம் பிரிடிஷ் கடற்படை கூட்டம் சரித்திரத்திலேயே இதுதான் முதன் முதலில் அமைக்கப்பட்டதாகும். பஸிபிக்கில் சமீபகாலத்தில் ஒத்திகை செய்தது முற்றிலும் வெற்றிகரமாக முடிந்தது.

இந்த கடற்படையில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் அட்லாண்டிக் போரில் சேவை செய்துவந்த சாமான் கப்பல் படையைச் சேர்ந்தவர்கள். அது ஒரு கதம்பமான கடற்படை

யாக இருக்கும். அதில் டேனிஷ், டச்சு, பெல்ஜிய, கிரேக்க கப்பல்களும் இருக்கும். பிரிடிஷ் கடற் படை கிரேக்கக் கப்பல்களை இவ்வித உபயோகத்திற்குத் திருத்தியமைத்திருக்கிறது.

பஸிபிக் கடல் பூராவிலும் சங்கிலி கோர்த்தாற்போல் சுரங்கவாரிக் கப்பல்களும், விமானங்களும், பழுது பார்க்கும் கப்பல்களும், எண்ணெய்க் கப்பல்களும், தண்ணீர்ப் படகுகளும், வெடி மருந்துக் கப்பல்களும், சர்ப்பராக் கப்பல்களும் குவிந்து நிற்கும். உல்வர்த் என்ற சிறிய விமானந்தாங்கிகள் விமானங்களை நடவடிக்கை ஸ்தலத்திற்கு இட்டுச்செல்லும். விமானங்களும் அவைகள்மேலேயே வந்திறங்கும். பூராவான மூஸ்தீப்புகளுள்ள பழுது பார்க்கும் சாலைகளில் விமானங்கள் துரிதமாகப் பழுது பார்க்கப்படும். இவ்விதமாக போர் முனைகளிலுள்ள விமானங்களின் சக்தியை எக்காலத்திலும் உத்தம பக்ஷமான நிலைமையில் இருந்துவரும். மற்ற மிதந்து செல்லும் ஒர்க் ஷாப்புகளில் இணைப்பு, ரிவெட் வேலைகள் செய்யப்படும். அவற்றில் கப்பலின் யாக்கையிலுள்ள ரிப்பேரும் பழுது பார்க்கப்படும். பலமாக முடமாக்கப்பட்ட கப்பல்கள்தான் போர் முனையை விட்டுச்சென்று ஆஸ்திரேலிய தளங்களுக்குப் போக வேண்டும்.

இந்தக் கப்பல்களுக்கருகில் மிதக்கும் முகாம்களில் பழுது பார்க்கும் வேலையிலீடுபட்டிருக்கும் வேலைக்காரர்கள் வசித்து வருகிறார்கள். சமுத்திரத்தில் பழைய கப்பல்களை எடுக்கும் கப்பல்களும், சமுத்திரத்தில் செல்லும் இழுப்புக் கப்பல்களும், தண்ணீரை சுத்தி செய்யும் கப்பல்களும், சாரயம் காச்சும் கப்பல்களும், சஞ்சாரம் செய்யும் ஸினிமாப் படக்காக்ஷியும், பாட்டுக் கச்சேரியும் அமைக்கப்பட்டிருக்கும் அநேக வசதியுள்ள கப்பல்கள் இன்னும் வந்து சேரவில்லை. அவைகளும் வெகு சீக்கிரத்தில் வந்து சர்ப்பராக் கடற் படையுடன் சேர்ந்துகொள்ளும். ஏனென்றால் இந்தக் கடற் படையிலுள்ளவர்கள் வெகு காலம் கடலிலேயே இருந்து வரவேண்டியிருப்பதால் அவர்களுக்கு நடவடிக்கையல்லாத காலங்களில் பொழுது போக்குக்காக சகலவிதமான வசதிகளும் அமைக்கப்படும்.

இந்தக் கடற் படைக்கு அநேக படையெடுப்புகளில் பெரும் பங்கெடுத்துக்கொண்ட ஒரு சாமான் கப்பல்தான் தலைமை வகிக்கும்.

மத்திய கிழக்கில் ஒத்துழைப்பு.

அராபிய நாடுகளின் சமஷ்டி.

(டைம்ஸ் பத்திரிகை).

எகிப்து, இராக், ஸாடி அராபியா, ஸிரியா, லெபனன், யேமன், டிரான்ஸ் ஜோர்டான் முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் அராபிய நாடுகளின் சமஷ்டி ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டனவென்று மார்ச்சு மாதம் 22-ம் தேதியன்று கெயிரோவில் 19 குண்டுகள் போடப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டது.

இந்த சிரம சாத்யமான வேலை இவ்வளவு சீக்கிரத்தில் பூர்த்தியானதென்பது எதிர்கால க்ஷேமத்தை உத்தரவாதம் செய்யக்கூடும். அங்கு கூடியிருந்த ராஜ தந்திரிகள், சான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் ஒன்றுபட்ட அபிப்பிராயத்தை தெரிவிக்க அராபிய நாடுகளுக்குள் பூர்ணமான ஒற்றுமை வேண்டுமென்பதை நன்கு உணர்ந்தார்கள். இந்தப் போர் முனையை லெவாண்ட் கடற்கரையிலுள்ள நாடுகளைக்கொண்டு பலப்படுத்தவும் அவர்கள் ஆசைப்பட்டார்கள் என்று புலப்படுகிறது. அலெக்ஸாண்ட்ரியாவில் முடிவு செய்யப்பட்ட பொதுவான லக்ஷியங்களை நடைமுறையில் அமுலுக்குக்கொண்டு வருவது என்பது சுலபமான காரியமாக இருந்திராது. பெரிய வல்லரசுகளுடன் புதிதான பயன்படத்தக்க சம்பந்தங்களை ஆரம்பிக்கும் விஷயத்தில் இடையூறுகளை உண்டுபண்ணக்கூடிய எந்த நடவடிக்கைகளையும் கையாளக்கூடாதென்று அராபியத் தலைவர்கள் நல்லுணர்ச்சியுடன் இருந்து வந்தார்கள்

புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் அராபிய நாடுகளின் சமஷ்டி சில முக்கியமான சௌகரியங்களுடன் அதன் போக்கை ஆரம்பிக்கிறது. யுத்த காலத்தில் அந்நாடுகளுக்கிடையே ராஜீய பொருளாதார ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. அராபிய நாடுகளின் ஐதிகமான ஒற்றுமையை விளக்கும் ஒரு வட்டாரத்திலுள்ள நாடுகளின் கோஷ்டியினால் ஏற்படும் சௌகரியங்கள் சர்வதேச உலக பத்திரத்துக்காக டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டின் திட்டங்கள் மூலம் வெளியாகி விட்டன.

அராபிய நாடுகளின் சமஷ்டியை நேசதேசத்தார்கள் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறார்கள். மேற்குநாடுகளின் தூண்டுதலினாலும் உதவியினாலும் மத்திய கிழக்கின் ராஜீய பொருளாதார சீர்திருத்தத்திற்கு சாதகம் ஏற்படும். மத்திய கிழக்கில் விசேஷ அக்கரையுள்ள நேசநாடுகளின் ஒன்றுபட்ட அக்கரைகள் அராபிய உலகத்தின் ஒன்றுபட்ட அக்கரைகளுடன் சாஸ்வதமான லாபத்துக்காக ஒன்றுபடுத்த இது வசதியை அளிக்கும். ஐதிகமான விரோதங்களை

அகற்றி, தனிப்பட்ட நாடுகளின் அக்கரைகளைவிட ஒரு வட்டாரத்திற்குட்பட்ட நாடுகளின் அக்கரைதான் முக்கியத்வமுள்ளதென்ற மனப்பான்மையுடன் குறிப்பிட்ட பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளவும் இது உதவியளிக்கும் இன்னும் சில முக்கியமான பிரச்னைகளை நேசநாடு களும், மத்திய கிழக்கு நாடுகள் பூராவும் ஒன்றுபட்டு ஆலோசனை செய்தால்தான் திருப்தி கரமான முறையில் தீர்த்துவிடக்கூடும். இந்த அபிவிருத்திகளால் ஏற்படக்கூடிய லாபங்கள் இந்த நாடுகளுடன் வெகுகாலமாக உறவாடிவரும் பிரிடனைவிட எந்த நாட்டிற்கும் வரவேற்கக் கூடியதாக இருக்காது.

உலக பத்திரமும், வட்டார ஒப்பந்தங்களும்.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின்கண் உள்ள பிரச்னைகள்.

(W. N. யூயர்).

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு இன்னும் ஒரு மாதத்தில் நடைபெறப்போவதால் டம்பார்டன் ஒக்ஸ் மகாநாட்டின் நகல் திட்டங்களை நன்கு ஆராய்ச்சி செய்யும் கட்டம் வந்துவிட்டது.

தற்பொழுது ஒரு நாட்டைக் குறித்து நடவடிக்கையை ஆரம்பிப்பதில் அந்த வல்லரசுக்கு ஒட்டுரிமை உண்டா இல்லையா என்ற பிரச்னை மறைந்துவிட்டது. பிரெஞ்சுக்காரர்கள் உலக பத்திர சாஸனத்திற்கும், ருஷ்யாவுக்கும், பிரான்ஸுக்கும் ஏற்பட்ட வட்டார சம்பந்தமான ஒப்பந்தத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றித்தான் குறைகூறிவருகிறார்கள். டம்பார்டன் ஒக்ஸ் மகாநாட்டின் நகல் திட்டத்தின்படி பிரதேச ஒப்பந்தத்தின்படி அக்கிரமப்போரை ஆரம்பிக்கும் நாட்டைப்பொறுத்து ராணுவ நடவடிக்கையானது உலக பத்திர கௌன்ஸிலின் சம்மதத்தின்பேரில்தான் நடைபெறவேண்டும். உலக பத்திர சபை அங்கீகரிக்கா விட்டாலும் ஒரு வட்டாரத்தில் நடவடிக்கை அவசியமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டு மென்று பிரெஞ்சு வியாக்யானிகள் சொல்லுகிறார்கள்.

இது ஏற்கனவே தோன்றியுள்ள பிரச்னைதான். சமாதானத்தை நிலைநாட்டுவது உலக ஸ்தாபனத்தின் முக்கியமான பொறுப்பா அல்லது குறிப்பிட்ட வட்டாரங்கள் விசேஷமான ஒப்பந்தங்களின் அமுலின் ஒத்தாசை பெறவேண்டுமா என்பதுதான் பிரச்னை. பத்திர மென்பது பிரெஞ்சு ரைன்லாந்தின் எல்லைச்சரக பத்திரமென்று பிரான்ஸிலுள்ளவர்கள் பல மான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். பிரெஞ்சுக்காரர் வாஸ்கஸ் இடைவெளியினால் மெய் மறந்து இருக்கிறார்கள் என்று இரண்டாவது கெயிஸர் வில்ஹெல்ம் ஒரு சமயம் சொன்னார் இந்த பிரமை இன்னும் பிரான்ஸில் குடிகொண்டிருக்கிறது.

இரண்டு உலக யுத்தங்களுக்கிடையே உள்ள வருஷங்களில் பிரெஞ்சுக்காரர்கள் சர்வ தேச சங்கத்தின் திட்டத்தைவிட ஐரோப்பிய ஒப்பந்தங்களுக்குத்தான் அதிக முக்கியத்வம் அளித்துவந்தார்கள். ஜெனிவாவில் ஒரு தரம் சொல்லப்பட்டது போல பிரான்ஸ் சம்பந்தப் பட்டமட்டில் சர்வதேச சங்கம் பிரான்ஸின் ஒப்பந்தங்களின் வட்டாரத்திற்குட்பட்டது. அதன் ஒப்பந்தங்கள் ரைன்லாந்து எல்லைச்சரகத்தின் பத்திரத்தை லக்ஷியமாகக் கொண்டவைகள்.

இந்த மனப்பான்மை சிலாகிக்கத்தக்கதாக இருந்தாலும் அபாயம் பொருந்தியது. பிரான்ஸை பாதிக்காத எந்த பிரச்னைகளிலும் பிரான்ஸுக்கு அலக்ஷிய புத்தியை உண்டு பண்ணுகிறது. ஜெனிவாவில் மஞ்சூரியா நெருக்கடியின்பொழுது பிரெஞ்சு பத்திரிகாசிரியர் களில் பிரக்யாதி பெற்ற ஒருவர் சர்வதேச சங்கம் இது விஷயங்களில் அனாவசியமாகத் தலையிடுகிறதென்று கோபமாகப் பேசினார். மஞ்சூரியா வெகு தூரத்திலிருக்கிறதென்று அவர் சொன்னார். ரைன் நதியிலிருந்து வெகு தூரத்திலிருக்கிறதென்று சொல்லுகிறீர்களா என்று கேட்டேன். ஆம் என்று அவன் சர்வ சாதாரணமாகவும் தாடஸ்த்பமாகவும் பதிலுரைத்தான். பிரான்ஸின் எல்லைச்சரகத்தை நேரடி பாதிக்காத எந்த விஷயத்திலும் அவர்கள் கவலைப்படுவதில்லை.

"சமாதானம் கூறுபோடக்கூடியதில்லை" என்று லிட்வினாவ் சொன்ன பதங்களடங்கிய, பிரெஞ்சுக்காரர்கள் மட்டும் பாத்தியம் கொண்டாடாத, இந்த மனப்பான்மைதான் சர்வ தேச சங்க அமைப்பின் பலமான பலஹீனமென்று நான் நினைக்கிறேன்.

உலக பத்திரத்திற்காக ஒப்பந்தங்களை நாடிய நிர்வாகங்கள் சங்கத்தினிடத்தில் அலக்ஷிய புத்திகொண்டன. சர்வதேச சங்கமும் ஒரு வட்டாரத்திலுள்ள அமைப்பும் ஒருவர் மற்றொருவர்பேரில் பொறுப்பைச் சுமத்திவந்தார்கள். உதாரணம், சாகோ யுத்தம். ஜெனிவாவில் சர்வதேச சங்கம் முயன்றுவரும்பொழுதே, வல்லரசுகளின் கோஷ்டிகள் தாங்களே பிரச்னைகளைத் தீர்க்க முயன்றுவந்தன. ஹோர்—லவால் சம்பந்தம் இதற்கு உதாரணமாகும்.

மற்ருெரு விளைவும் ஏற்பட்டது. யுத்தங்களுக்கிடையே ஐரோப்பாவில் ஏராளமான ஒப்பந்தங்கள் ஏற்பட்டினைல், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஒரு தேசம் எவ்வளவு பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில் பூர்ணமான நிச்சய புத்தி ஏற்படவில்லை. உதாரணமாக, லோகார்னோ ஒப்பந்தத்துக்கும் பிரெஞ்சு கிழக்கு நாடுகள் ஒப்பந்தத்துக்கும் எவ்வித சம்பந்தமுண்டென்பது வெகு நாட்களாக விவாதத்திலிருந்துவந்தது. பரஸ்பர உதவி ஒப்பந்தத்துக்கும் அநுக்கிரமண ஒப்பந்தத்துக்கும் உள்ள சம்பந்தங்களும் தெளிவுபடவில்லை. இந்த ஸ்தாபனத்தின் சிக்கலான அமைப்புதான் அதன் லக்ஷியத்தை சித்திபெருமல் செய்துவிட்டது.

இந்தக் குழப்பத்திற்கு, சர்வதேச சங்கத்தை ஆமைத்தவர்கள் சர்வ தேச சங்கத்துக்கும் மாகாண ஒப்பந்தங்களுக்கும் உள்ள சம்பந்தத்தை நிர்த்தாரணம் செய்யாததுதான் காரணமாகும். இந்தத் தவறுதல் மறுபடியும் நேரிடாதென்று நாம் நம்புகிருேம். இந்தப் பிரச்னை சுலபமானதல்ல. ஆகிலும் அதை நன்கு பரிசீலனை செய்து வெற்றிகரமாகத் தீர்த்துவிடாவிட்டால் மறுபடியும் அபாயம் பொருந்திய குழப்பம் ஏற்படும்.

ஆகையால் டம்பார்டன் ஒக்ஸ் நகல் திட்டத்தைப்பற்றி பிரெஞ்சுக்காரர்கள் சொல்லி வரும் குறைவுபாடுகள் இந்த நுட்பமான பிரச்னையை சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் பூர்ணமாகச் சர்ச்சை செய்வதற்கு அநுகூலமாக இருக்கும்.

சர்வகலாசாலைகளில் விமானப்பயிற்சி திட்டங்கள்.

H. C. பாப்வர்த்—O. B. E.

(மதராஸ் யுத்த சஞ்சிகை)

திருவாங்கூர் சர்வ கலாசாலையின் புரோ வைஸ்-சான்ஸலர் திருச்சி ஒலிபெருக்கில் விமானப்படை பயிற்சியை மாணவர்களுக்குச் சிபார்சு செய்தபொழுது ரெக்ரூட்மெண்டுக்கு இடஞ்சலாக உள்ள தற்போதிய கல்வி முறையைப்பற்றி குறை கூறி, தற்போதிய உலக நடவடிக்கையில் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியாமல் தடை பெற்றிருக்கும் மாணவர்களுக்கு உற்சாகமளிக்க மாணவர்கள் தங்கியிருக்கக்கூடிய கேடர் விமானப்படை பயிற்சி பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டுமென்று வேண்டுகோள் செய்திருக்கிருர்.

முதலாவது இந்திய விமானப்பயிற்சிப் படைப்பகுதி இரண்டு வருடங்களுக்குமுன் அலிகாரில் முஸ்லீம் சர்வகலாசாலையில் அமைக்கப்பட்டது. அதன்பின் அந்த திட்டம் படிப்படியாக விஸ்தாரம் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற டிசம்பர் மாதத்தில் அந்த திட்டம் ஒன்பது சர்வகலாசாலைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்று இந்தியாவிலுள்ள எல்லா சர்வகலாசாலைகளிலும் இந்திய விமானப்படை பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பயிற்சியில் சர்வகலாசாலைகளில் படிக்கும் மாணவர்களைச் சேர்த்துகொள்ளும்படி விமானப்படை அதிகாரிகள் அழைக்கும் நோக்கம் யாதெனில் இந்தப்பயிற்சி பெருவர்களுக்குள் ராயல் இந்திய விமானப்படைக்கு விமானப்படை ஆபீஸர்களைத் தேர்ந்தெடுக்கலாமென்பதற்காகத்தான். இந்தப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கமிஷன்களின் சங்கியையை கவனித்தாலே இந்த திட்டம் நல்ல பலனளித்துவருகிறதென்றும் இதை அபிவிருத்தி செய்து மேன்மேலும் நடத்தி வரவேண்டுமென்றும் விமானப்படை அதிகாரிகள் கருதுகிருர்கள்.

சர்வகலாசாலைகளில் இந்தப் பயிற்சி மூன்று மாத கால அளவு உள்ளது. இதிலுள்ள எல்லா காடட்டுகளும் வாலன்டியர்கள். இந்தப் பயிற்சியை மாணவர்கள், பள்ளிக்கூட நேரத்திற்கு வெளியிலும், அதாவது காலையிலும் மாலையிலும், ரஜா நாட்களிலும் பெற்று வருகிருர்கள்.

தலைவர்கள் பயிற்சி.

பயிற்சியின் காரியக்கிரமம் மிகவும் ஸ்வாரஸ்யமானது. கால அளவு குறைவாக இருந்தாலும் பரிஷ்காரமானது. 11 மணி நேரத்திற்குள் நிர்வாகமும் பொதுவான பயிற்சியும் அளிக்கப்படுவதுடன் தொழிற் பயிற்சியும், தொழிற் முறையல்லாத பயிற்சியும் ஏராளமாக அந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பயிற்சி எவ்வகைப்பட்டதென்பதை நான் சொல்லுகிறேன். அவை விமானப்படை ஆபீஸருக்கும், அவருக்கு அவசியமான குணங்களுக்கும் சாதகமானவை. பொறுப்பு, தலைமை வகிப்பது, அதிகாரம், ஒழுங்குமுறை, முக்கியமாக தன்னொழுக்கம், தன்னம்பிக்கை, அகம்பாவமில்லாத நம்பிக்கை இவைகள் அத்தியாவசியமான குணங்கள். இவைகளை வளர்ச்சிப்பது சுலபமான காரியமல்ல.

பயிற்சிபெறும் அநேக வாலிபர்கள், தவறுதல் செய்துவிடுவோம் என்ற பயத்தினுல் தலைமை வகிப்பதை வெறுக்கிருர்களென்று ரிபோர்ட்டுகளில் ஒன்றில் சொல்லப்பட்டிருக்

கிறது. ஆகையால் அவர்கள் பிறருடைய தலைமையிலிருக்கவே பிரியப்படுகிறார்கள். ஆகையினால் பயிற்சி பெற்றவர்கள் இறுதியில் சேவைப்படையினரைத் தேர்ந்தெடுக்கும் சங்கத்தின் முன் ஆஜராகும்பொழுது அநேகர்கள் லாயக்கில்லையென்று தள்ளிவிடப்படுகிறார்கள்.

எதிர்கால ஆபீஸர்களுக்கான பாடங்கள்.

மற்ற பாடங்களுடன் கீழ்கண்டவைகளும் கற்பிக்கப்பட வேண்டும்.

(a) அநேக யுத்த அரங்கங்களில் போர் நடவடிக்கைகள். முக்கியமாக பிரிடிஷ் விமானப் படையுடன் பயிற்சி.

(b) பத்திரமாகச் செல்லும் பிரச்னை.

(c) விமான கமனம் சம்பந்தமான விமான வேகம், எண்ணெய் அளவு, குண்டுவீசும் அளவு, ரேகா படம், அவைகளைத் துலக்கிச்சொல்லுவது போன்ற விஷயங்களில் கணிதக்கல்வி.

(d) நாவிகேஷன்—பீரங்கிகள, வழிகள், காந்த திசைக்கருவிகள், நிலைமைகளையும் தூரத்தையும் குறிப்பாய் அறிவது, படம் வரைவது, படத்தைத் துலக்கிச் சொல்லுவது.

(e) தளவாடங்கள்—வெடிகுண்டுகள், பீரங்கிகள், நீர்மூழ்கிகளைத் தாக்கும் வெடி குண்டுகள்.

(f) விமான எஞ்சின்கள்.

(g) விமானம் ஓட்டுவது—உதாரணமாக, விமானத்தை எவ்விதம் பறந்து செல்லும்படி செய்வது, ஆகாயத்தில் அதை எவ்விதம் நடத்துவது. ஆகாயத்தில் என்ன நடைபெறுகிறது. ஏன் அவ்விதம் நடை பெறுகிறது.

(h) துப்பாக்கியை உபயோகிப்பது, ஒவ்வொரு காடட்டும் குறைந்தபக்ஷம் மூன்று மணி களாவது விமானத்தில் செல்லுவது.

தற்போதிய கல்வி திட்டத்தினால் தேர்ச்சி பெறவில்லை.

நாம் மேலே கூறிய படிப்பு பூர்ணமானதும் ஸ்வாரஸ்யமுள்ளதும் சுறுசுறுப்பும் ஆவலும் உள்ள எந்த வாலிபரையும் அதைக்கற்றுக்கொள்ளும்படி தூண்டி வசப்படுத்தக் கூடியது.

சர்வகலாசாலைகளில் சில காலம் இந்தப் படிப்பு கற்பிக்கப்பட்டபொழுது விமானப்படை அதிகாரிகள் அதில் சில குறைவுபாடுகளும் பிற்போக்குகளும் இருக்கின்றன என்று கண்டு பிடித்தார்கள். இந்தக் குறைவு எல்லா மாணவர்களிடம் காணப்பட்டது. அவர்களுடைய அறிவு பூராவாக விவகாரத்துக்குதவாததும் கோட்பாடுகள் அடங்கியதுமாக இருப்பதே ஒழிய நடைமுறையில் மாணவர்களுக்கு கொஞ்சம் கூட அறிவே இல்லை.

உயர்தரக்கல்விப் பள்ளிக்கூடங்களிலும் சர்வகலாசாலைகளிலும் அநேக வருடங்களாக அனுபவம் பெற்ற நமக்கு இது ஆச்சரியமாகத் தோன்றவில்லை. இந்தியாவில் இப்பொழுது பெரும்பாலும் காணப்படும் கல்வி திட்டத்தைப்பற்றிச் சரியான முறையில்தான் குறைகூறப் படுகிறது. ஆகையால் சர்வகலாசாலையில், ஆங்கிலம், கணிதம், பொதுவான அறிவு முதலியவற்றில் காடட்டுகளுக்கு அதிக அறிவு வேண்டுமென்று விமானப்படை அதிகாரிகள் சர்வகலாசாலைகளை வேண்டிக்கொண்டார்கள்.

தேர்ந்தெடுக்கும் சங்கங்களிலுள்ள ஆபீஸர்கள், அநேக காடட்டுகள் ஆங்கில காவியத்திலிருந்தும் வாசகத்திலும் அநேக பாகங்களை ஒப்புவித்தாலும், இன்று எழுதப்படும், பேசப்படும், நவீன, நடைமுறை, 20-ம் நூற்றுண்டு ஆங்கில மொழிகளை அவர்கள் சுலபமாக உபயோகிக்கமுடியவில்லையென்று என்னிடம் சொன்னார்கள்.

சர்வகலாசாலை ஐதீகத்திலிருந்து மாறுதல்.

மேற்சொல்லிய படிப்புகளில் உபரியான கால அளவு போதனை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது இந்தக் கல்வி முறை சர்வகலாசாலை ஐதீகத்திலிருந்து மாறுதல் செய்வதாகும். சர்வகலாசாலை மாணவர்கள் விவகாரத்துக்கு உதவாமல் கோட்பாடுகளைக்கற்று வருவதினால் ஏற்பட்ட குறைபாடுகளை நீக்க இந்த மாறுதல் அவசியமாகும்.

இந்தக் குறுகிய காலப் பயிற்சியினால் ஏற்பட்ட வெற்றிகளை மதித்துச் சொல்லுவது சுலபமானதல்ல. அநேக காடட்டுகள் ராயல் இந்திய விமானப்படையில் கமிஷன் பெற்ற உத்தியோகம் வகித்து வருகிறார்கள். அநேகர்கள் அந்தப் படையில் தொழிற் சம்பந்தமான வேலைகளில் அமர்ந்துவிட்டார்கள்.

அப்படியிருந்தும், அநேக காடட்டுகள் பயிற்சி பெற்றபின் தேர்ந்தெடுக்கும் சங்கத்தாரால் லாயக்கில்லாதவர்களென்று தள்ளிவிடப்படுகிறார்கள் என்று விமானப்படை அதிகாரிகளும் சர்வகலாசாலைகளும் ஏமாற்றமடைகின்றன. மேலும் அநேகர்கள் அவ்விதம் பரிகரிக்கப்படுவதினால் மாணவர்களுக்கும் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பயிற்சி பிரயோஜனமற்றதென்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். பயிற்சிக்குப்பின் வேலை கிடைப்பது நிச்சயமில்லை. விமானப்படை பயிற்சி முகாமில் மூன்று மாதங்கள் பயிற்சிபெற்று சர்வகலாசாலைப் பரிக்ஷைகளில் நன்றாகப் பரிக்ஷை கொடுக்க முடியாமல் போகும் அபாயத்துக்கு உட்படக் கூடாது என்று புத்திசாலியாக உள்ள மாணவர்கள் நினைக்கிறார்கள்.

வாலிபர்களை விமானப்படையின் மனப்பான்மை யுள்ளவர்களாகச் செய்வது.

கமிஷன்கள் கொடுக்கப்படாத ஆனால் கீர்த்தி பெறக்கூடிய பயிற்சி பெற்ற காடட்டுகளுக்கு உபயோகமில்லையென்று தள்ளிவிடுவதற்கு பதிலாக மற்றொரு வேலையைக் கொடுக்கவேண்டுமென்று நான் விமானப்படை தலைமை காரியாலயத்திற்கு சிபார்சு செய்திருக்கிறேன். அவர்களை கமிஷன் பெருத ஆபீஸர்களாகவும் அல்லது மற்ற உத்தியோகங்களுக்கும் நியமிக்கலாம். மேலும் ஒரு வருஷத்திற்குப்பின் மறுபடியும் ஒரு பரிக்ஷை வைக்கப்படுமென்றும் சொல்லவேண்டும். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு கமிஷன்களின் ஒரு குறிப்பான பங்கு ஒதுக்கி வைக்கப்படவேண்டும். அப்படியில்லாவிடில், அவர்களை மாணவர்கள் வசித்திருக்கக்கூடிய காடட் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டும். ஓய்வு நேரங்களில் மூன்று மாதங்களில் அளிக்கப்பட்ட பயிற்சியைக் கொண்டு மாணவர்கள் விமானப்படையில் கமிஷன் பெற்ற உத்தியோகத்துக்குள்ள அந்தஸ்தைப் பெற்று விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ரொம்பவும் புத்திசாலிகளாக உள்ளவர்கள்தான் இந்த சொல்ப கால அளவில் அதிக தேர்ச்சி பெறமுடியும்.

இந்த பிரச்னையைத் தீர்த்தால்தான், ஏற்கனவே ஜனசஞ்சரமாக உள்ள இந்த விமானப்படை. பயிற்சிக்கு பின் காலத்தில் நல்ல உபயோகமிருக்கும் என்று எனக்கு நம்பிக்கையிருப்பதால்தான் நான் இந்த சிபார்சு செய்கிறேன். இந்தப் பயிற்சி மூலம் நாட்டிலுள்ள வாலிபர்களுக்கு விமானப்படையில் அபிலாஷை ஏற்பட்டிருக்கிறது இப்பொழுது அது யுத்த அவசியத்துக்காகமட்டும் உபயோகிக்கப்பட்டாலும், எதிர்கால சமாதானத்தின்பொழுது நிச்சயமாய் அபிவிருத்தியடையப் போகும் பொதுஜன ஆகாயப் போக்குவரத்தில் அதன் பிரயோஜனம் நன்கு புலப்படும்.

புதுக்கோட்டை மாட்சிதங்கிய மன்னர்பிரான் கல்லூரியில் கைத்தொழில் பயிற்சி வகுப்பில் 1-4-45ஆயன்று காலியாகவுள்ள ஸ்தானங்கள்.

எலெக்ட்ரிஷியன்கள் ... 19 பிட்டர்கள் ... 13

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 244 (2-வது பிரிவு)

14- 4-45	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	18- 4-45	திருவரங்குளம்	... மாலை	7.00
15- 4-45	தென்னதிரயன்பட்டி	... ,,	7.00	,,	வம்பன்	... ,,	7.30
,,	விசலூர்	... ,,	7.30	19- 4-45	விராலிமலை	... ,,	7.00
16- 4-45	மழையூர்	... ,,	7.00	,,	பொருவாய்	... ,,	7.30
,,	கரம்பக்குடி	... ,,	7.30	20- 4-45	வாளரமாணிக்கம்	... ,,	7.00
17- 4-45	குழிபிரை	... ,,	7.00	,,	எம்பல்	... ,,	7.30
,,	செவலூர்	... ,,	7.30				

பிரஸங்கம் 245 (3-வது பிரிவு).

21- 4-45	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	25- 4-45	அண்டக்குளம்	... மாலை	7.00
22- 4-45	கீரப்பழனி	... ,,	7.00	,,	கிள்ளனூர்	... ,,	7.30
,,	ஆலூர்	... ,,	7.30	26- 4-45	பள்ளிவாசல்	... ,,	7.00
23- 4-45	புத்தாம்பூர்	... ,,	7.00	,,	பில்லமங்கலம்	... ,,	7.30
,,	வைத்திக்கோவில்	... ,,	7.30	27- 4-45	நச்சாந்துபட்டி	... ,,	7.00
24- 4-45	வடவாளம்	... ,,	7.00	,,	விராச்சிலை	... ,,	7.30
,,	சம்மட்டிவிடுதி	... ,,	7.30				

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

14— 4—45	பொன்னமராவதி.	21— 4—45	வெட்டம்விடுதி.
15— 4—45	தீத்தான்விடுதி.	22— 4—45	மருதன்கோன்விடுதி.
17— 4—45	வடகாடு.	24— 4—45	ராமச்சந்திரபுரம்.
19— 4—45	ஆலங்குடி.	26— 4—45	குழிபிரை.
20— 4—45	புதுக்கோட்டை.	28— 4—45	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—17-4-45.